
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு - ஐப்பசி 1992




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## ஓவியக் கண்காட்சி

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு -பிரான்ஸ் கிளையினரால் நடாத்தப்படவிருக்கும் ஓவியக் கண்காட்சிக்கு, நாம் வாழும் காலத்தின் யதார்த்தத்தை உணர்த்தி எமது வாழ்வியல் பிரச்சனைகளை உள்வாங்கி நிற்கும் ஓவியங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. வளர்ந்து வரும் ஓவியர்கள், ஓவியக்கலையில் ஆர்வமுடையோர்களிடமிருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்களது ஆக்கத்துடன் முழுப்பெயர், தொடர்பு முகவரி போன்ற விபரங்களையும் எரிமலை முகவரிக்கு காலதாமதமின்றி அனுப்பிவையுங்கள்.

**இறுதித் திகதி**: 15. 11. 1992

பாட்டோடு நீண்ட பயணம் புறப்பட்டான்
மாட்டோடு வண்டி சிதற மனிசன் போய்
குற்றுயிராய் வீழ்ந்தான்; கொடும்பாவி ஏவிய 'ஷெல்'
பட்டொருவன் வாழ்வு பறிபோயிற்றொரு கணத்தில்.

**ஓவியம்: மாற்கு**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே மலர்பவை



விடுதலைத் தீயும் அணைக்கவந்த கரங் களும். ..... 03

காலமும் கோலமும். .... 07





ஆழவேரோடிய ஆல மரமும் அசைக்க நினைத்த புயல்களும். .... 12


தொடரும் சாதனை கள். .... 21





சர்வதேச அங்கீகா ரத்தை நோக்கித் தமிழீழம். .... 25

நினைவில் சில நிகழ் வுகள். .... 29





தமிழகத்தில் தேசிய எழுச்சி. .... 36

சோமாலியா; கைவிடப் பட்ட நாடு. .... 43



கவிதைகள

மானத்தமிழனோடா? .... 06
ஆன். ரணசிங்கா "என் அம்மாவுக்கு" .... 09
இவர்கள் சுதந்திரப்பறவைகள் .... 18
எதுநாள் வரைக்கும் நாமும் நமது துயரமும் .... 27

போரும் அதன் சமூகப் பயன்பாடும் .... 19
யாழ். மாவட்ட தொழில் அபிவிருத்தித் திட்டம் .... 24
நினைவில் சில நிகழ்வுகள் .... 29
இனி ஒருவிதி .... 34
அக்கறைப் பூக்கள் .... 38
குறுக்கெழுத்துப் போட்டி இல-2 .... 39

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

**பதினோராம் ஆண்டு**

ஐப்பசி 1992

**ஆக்கங்கள், அபிப்பிராயங்கள், மற்றும் தொடர்புகட்கு:**



**எரிமலை**
**தாய்மண் வெளியீடு**
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


## அமைதித் தீர்வுக்கான சூழ்நிலை உருவாகி வருகின்றதா?

**ஸ்ரீ**லங்கா அரசாங்கம் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது. இராணுவ வெற்றி குறித்த அதன் கற்பனைகள் தகர்ந்து வருகின்றன. அண்மைக்காலங்களில் அரச படைகளுக்கு அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகளும், இழப்புகளும் பிரேமதாசாவை ஆட்டம் காண வைத்துள்ளன. வெறுமையான வதந்திகளே தன்னைத் தூக்கியெறிந்து விடுவதற்கான மக்கள் எதிர்ப்பைத் தோற்றுவித்து விடுமோ என அஞ்சுகின்றார். வளர்ந்துவிரும் இராணுவ அதிகாரத்தின் கைதியாக தான் மாற்றப்படலாம் என்ற அவநம்பிக்கையுடனேயே அவரது காலம் கழிகின்றது. பொருளாதாரச் சுமைகள், போர் அழுத்தங்கள், போர்வரியினால் ஏறிய விலைவாசிகள் ஆகியவை அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பை வளர்த்து வருகின்றன. மனஉறுதி குலைந்து, சண்டையிடப் பயந்து நடுங்கும் இராணுவக் கீழ்மட்டமும், இராணுவ ஆட்சேர்ப்புக்கு ஆள் சேராமையும், இராணுவப் பின்னடைவுகளுக்கு அரசியல் தலைமையைக் குறைகூறும் இராணுவ உயர்மட்டமும் பிரேமதாசாவுக்கு பெரும் தலையிடியாக அமைந்துவிட்டுள்ளன. இந்நிலையில், போரைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய வெளிநாட்டு ஆதரவும் அரசாங்கத்திற்கு குறைந்து வருகின்றது. யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, அரசியல்தீர்வு என்பவற்றிற்கான சர்வதேச சமூகத்தின் விருப்பமே பிரேமதாசா அரசாங்கத்தின்மீது அழுத்தமாக இறங்குகின்றது. தமிழீழ மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு மறுப்பாக வெறிகொண்டு எழுந்துள்ள தீவிர சிங்கள இனவாதம் எவ்வித பயனுமற்று அரசாங்கத்தை மேலும் சிக்கலுக்கே உள்ளாக்கி உள்ளது.

தமது சுதந்திர வேட்கையைத் தணிக்க முடியாது என்பதை தமிழ் மக்கள் செயல்பூர்வமாக நிருபித்து வருகின்றனர். சகல தடைகளையும் உடைத்துக் கொண்டு, சகல துறைகளிலும் வேகமான பாய்ச்சலைக் காட்டி வருகின்றனர். வேகம், துடிப்பு, படைப்பு, முன்னேற்றம் என்ற ரீதியில் விடுதலைச் சக்கரம் தமிழீழ மக்களால் உருட்டப்படுகின்றது. தமக்குச் சாதகமற்ற நிலப்பகுதியில், நேரடியாக மரபுச் சமரை தவிர்க்க வேண்டிய கட்டாய வேளையில் உத்திரீதியான ஒருசில பின்நகர்வுகளை தமிழீழ விடுதலை இராணுவம் செய்துள்ள போதிலும், ஆக்கிரமிப்புச் சிங்கள இராணுவத்தின் நாடி தளர்ந்து வருகின்றது என்பதை அனைவரும் உணரக் கூடியதாக உள்ளது. வாழும் உரிமைக்கான போட்டியில் தமிழீழ மக்கள் வெற்றி பெற்று வருகின்றார்கள்.

இந்த ஜதார்த்த நிலையை ஏற்றுக்கொள்வதைத் தவிர ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு வேறு வழி இல்லை. இவ்வுண்மையை உணர்ந்ததின் அடிப்படையில், சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்தின் கீழ் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழீழ மக்களின் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளலே இலங்கைத் தீவிலுள்ள சகல மக்களினதும், அமைதிக்கும், சுபீட்ச வாழ்விற்கும் உத்தரவாதம் அளிக்கும். அதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவே உணரக்கூடியதாக உள்ளது. ■

www.tamileelamarchive.com

# விடுதலைத்தீயும்



# அணைக்க வந்த கரங்களும்

எமது விடுதலைப் புலித் தோழர்களிடையே திலீபன் முன் மாதிரியானவனாகவே திகழ்ந்தான். மக்களை அரசியல்மயப் படுத்துகின்ற ஒரு புனிதப் பணியை எவ்வாறு இயற்றுவது என்பதை நாம் ஒவ்வொருவரும் அவனிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

1983 ன் காலப் பகுதியில் இராணுவம் எமது கெரில்லாத் தளங்களை தேடி அழிப்பதற்காக மும்முரமாக திரிந்த வேளை.

"அன்னிய இராணுவம் எமது தெருக்களில் துணிச்சலாக திரிகிறது என்றால் எமது தெருக்களில் எம்மால் சுதந்திரமாக திரிய முடியாமல் போனதெப்படி?" என்ற கேள்வியை சதா தன்னுள் கேட்டு யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் திலீபன் திரிந்தான். மக்களை சந்தித்தான். அவர்களோடு உரையாடினான்.

அந்த மக்கள் தூக்கத்துக்கு போகும் நேரத்தைத் தவிர மற்றைய பொழுதெல்லாம் அவர்களோடுதான் கழித்தான்.

அச்சமயங்களில் மக்களுக்காக வாழ என்று பிறந்தவன் தானா திலீபன் என்ற கேள்வி என்னுள் எழுவதுண்டு.

இரவு தளம் திரும்பும் திலீபன் தான் சந்தித்த மக்களைப் பற்றி கதை கதையாக சொல்லுவான். மக்களைப் பற்றி அவன் சொல்லும் ஒவ்வொரு கதைகளிலும் பொதிந்த உட்பொருள்கள் மெய் சிலிக்கும் அனுபவங்களே!

எமது போராட்டத்தை வளர்ப்பதற்காக எமது மக்களிடமே உதவி கேட்டுப்போன போதெல்லாம் எமது மக்கள் எப்படி முன் வந்து உதவினார்கள் என்பதைப் பற்றி அவன் சொல்லும்போது அவன் கண்கள் பனித்தன.

ஒரு முறை வீட்டுக்கு வீடு சென்று பவுண் கேட்டபோது ஒரு பாடசாலை மாணவி தன் காதில் அணிந்திருந்த ஒரே ஒரு தோட்டை கழற்றி தந்து விட்டு காது சுரை விழுந்து விடக்கூடாது என்பதற்காக காதில் வேப்பம் குச்சியை சொருகிவிட்டு பாடசாலைக்கு சென்று வந்ததையும் இன்னுமொரு பொழுது ஒரு சிறுவன் பாடசாலைக்கு பஸ் வண்டியில் இரண்டு ரூபா செலுத்தி சென்றுவருவதை நிறுத்தி மாதம் அறுபது மைல் நடந்து மீதப்படுத்திய பணத்தை போராட்டத்துக்காக தந்ததையும் பற்றி தன் மனப்பதிவுகளாக வைத்திருந்து எமக்குச் சொல்லும் அவன் அதைக் களத்தில் பத்திரிகையிலும் எழுதினான். "எமது மக்கள் எப்படி போராட்டத்தைப் போற்றினார்கள், கண்ணீர்விட்டு வளர்த்தார்கள்? இவைதான் எமது ஒவ்வொரு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலைப் புலிகளின் கண் முன்னேயும் எக்கணத்திலும் நிழலாடி சரியான வழிகாட்டியாய் அமைய வேண்டும்." என்பான்.

மக்களை நேசிக்கும் இயல்பான அவனது மனது மென்மேலும் இந்த மக்கள் மீது அளவு கடந்த நேயமாக மாறியது.

அவன் தான் பிறந்த மண்ணை தாயாக நேசித்தான். அந்தத் தாயின் ஒவ்வொரு குழந்தைகளையும் அள்ளி மகிழ்ந்தான். துப்பாக்கிகளை அவர்களின் கைகளில் கொடுத்து அவர்கள் அவற்றோடு பயமின்றி விளையாடுவதை ரசித்தான். "ஆகா! புலி மாமா" என்று வாய் நிறைய கூப்பிடுவதை கண்டு உளம் பூரித்தான்.

போர்க்கோலம் பூண்டிருக்கும் மண்ணில் புழுதிக் கோலமாய் நின்று ஆனந்தக் கூத்தாடும் அந்த மழலைகளின் இன்பம் நீடிக்க வேண்டும். இந்தப் போராட்டம் வென்று அவர்கள் சுதந்திர புருசர்களாக ஆடி மகிழும் ஒரு நாளுக்காக காத்திருக்கவில்லை; போராடினான்.

களத்தில் நிற்கும் சக தோழர்களை மதிக்கும் பண்பும் அவர்கள் மீது கொண்ட அன்பும் ஒரு தாய்க்கு நிகரானவனாக எமக்கு காட்டியது. களத்தில் போராளிகள் வீர மரணத்தை தழுவிக் கொண்ட போதெல்லாம் அவன் அழுதிருக்கிறான் ஒரு குழந்தையைப் போல.

"எம்முடன் ஒன்றாக வந்த பல உயிர்களைக் காணவில்லை. எம் உயிரினும் இனிய மக்கள் எம் உயிரான எம் தோழர்கள் பலரை இழந்து விட்டோம் இவர்களை நாம் ஆழ்ந்து தேடும்போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் உயிரின் ஒளியாகிய தமிழ் ஈழ இலட்சிய தீபத்தில் அவர்களைப் பார்க்கிறோம். எனது மக்கள் விடுதலை அடைந்து விட்டார்கள் என்பதை நான் வானத்தில் இருந்து எனது தோழர்களோடு பார்ப்பேன்" இவ்வாறு அமையும் அவனது பேச்சும், எழுத்தும்-சாவைத் தெரிந்து கொண்டு ஒரு சத்தியத்தை எழுதவும் அதன்படி ஒழுகவும் முடிந்ததென்றால் போராட்டம் பற்றிய சரியான தெளிவும், சிறந்த தலைமையின் வழிகாட்டலும்தான் காரணம். அவன் தமிழீழ மண்ணை நேசித்தான்; காற்றை நேசித்தான்; இந்த மக்களை நேசித்தான்; மக்களின் உன்னத வாழ்வை சுதந்திரத்தை போராடிப் பெற்று வாழவேண்டும் என்ற மகத்தான உண்மையை நேசித்தான். இதற்காக அவன் தமிழ் ஈழத்தின் திக்கெல்லாம் திரிந்து போராட்டத்தின் பால் அணி திரட்டினான்.

திலீபனோடு இயக்க வேலைகளை ஆற்ற ஏராளமான இளைஞர்கள் இணைந்தார்கள்.

இந்த வேளையில் 1984 கார்த்திகை மாதக் காலப் பகுதியில் எமது விடுதலைப் புலித் தோழர்கள் அறுவரைக் காணவில்லை. தோழர்கள் எல்லோருமாகத் தேடினார்கள்; இரவிரவாகத் தேடிக் களைத்துவிட்டு அந்த தாய் தந்தையரிடம் போய் மௌனியாக நின்று பேசிய அவன் முகம். "உங்களோடை தானே ஐயா, விட்டனாங்கள்?" என்ற பார்வைகளோடு அழும் அந்த தாய் தந்தையர்களுக்கு பதில் அளிக்க முடியாது அவன் திணறிய திணறல்.

எப்படியாவது அவர்களை தேடிப்பிடித்து விடுவோம் என்ற அவனது அசுர முயற்சி; ஆனால் அவர்களை உயிரோடு தேடிப்பிடிக்க முடியவில்லையே!

புதர்களுக்குள், மண்ணுக்குள் புதைந்து கிடந்த அந்தத் தோழர்களைக் கண்டபோது.... சொந்தச் சோதரரின் சாவைக் கண்டு துடித்த துடிப்பு, எமது இயக்கப் போராளிகளின் ஒவ்வொருவரதும் இதயத்தை அசைத்தது.

மாற்று இயக்கங்கள் ஆயினும் மதித்துப் பேசுகின்ற பண்பாளனுக்கு விழுந்த முதல் அடி.

அவர்களிடம் எத்தனை முறை கதைத்தும் பயன் இல்லை, அவர்களை நினைக்கும்போது.....

வேண்டாம்! எமது நோக்கம்
அதுவல்ல.
ஒன்று கூறுகிறோம்.
நாங்கள் வெளிச்சத்தைப் பார்க்கிறவர்கள்!
இருட்டை அல்ல
கொடுமையின் கரங்களே
ஒன்று மட்டும் உறுதியாக
சொல்கிறோம்
உண்மைகள் உறங்குவதில்லை
அவை என்றோ ஒரு நாள் தீப்பொறியாக வெடிக்கும்
புதியதோர் உலகம் படைக்கும்

என்று 'களத்தில்' பத்திரிகையில் (1985 கார்த்திகை) எழுதினான்.

போராட்டத்தில் குதித்த மாற்று இயக்கங்கள் சில சரியான நெறிப்படுத்தலின்றி மக்களை போராட்டத்தின்பால் வெறுப்பை

திலீபன் நண்பர்களுடன் உற்சாகமான தருணத்தில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஊட்டுகின்ற வண்ணமாய் நடந்த போதெல்லாம் உள்ளம் கொதித் தான்.

அவர்களைச் சந்தித்தான்; இது போராட்டத்துக்குச் செய்யும் துரோகம் என வாதிட்டான்; முர ண்டு பிடிக்கையில் எச்சரிக்கைப் படுத்தினான்; தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிகழக் கூடாத கசப்பான அத்தியாயங்க ளையும் வேதனையோடு மகாபா ரதப் போரில் அர்ச்சுனனின் மனோநிலையுடன் கடந்து சென் றான்.

திலீபன் யாழ்மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராக இருந்த காலத்தில் தாக்குதல் நடவடிக் கையிலும் பங்கேற்றான்.

யுத்தத்திற்கு போவதற்கு தயாராய் முன்னிற்கும் அழகு தனியானது.

சிரித்துக் கொண்டே சண்டை பிடிப்பதென்பது சுதந்தி ரத்தை ஆகர்சிக்கும் போராளியால் மட்டும் தான் முடியும். சண்டை பிடிக்கின்ற போது மரணபயம் கவ் விக் கொள்ளாது, கொலை வெறி கண்களில் வீசாத தன்மையோடு இருப்பதை சண்டையிடும் களங் களில் காணலாம். அவ்வாறு திலீபன் ஒரு தென்றலாக நின்று வரலாற்றுக் கடமையை தெளி வோடு சுமந்தான்; மண்சுமந்த மேனியன்.

திலீபனைப் பற்றி பண்டிதரி லிருந்து பாமரர் வரை பேசினார் கள். மழலைகள் கூட புலி மாமா என அழைத்தார்கள், கவிஞர்கள் புகழ்ந்தார்கள். அவன் உயிரோடு வாழும் காலத்திலும் அவனைப் போற்றினார்கள்; கல்லறைகளில் மட்டுமல்ல-ஒவ்வொரு போராளி யும் அவன் வாழும் காலத்தே அந்த மக்களால் போற்றப் படுகின் றவனாக இருக்க வேண்டும். அதுபோல மக்களை நேசிக்கின்ற தூய அன்புக்கு நிகர் அவனே.

இருட்டில் வாழுகின்ற மக் களுக்கு ஒளி காட்டுபவனாக ஒரு தொண்டனாக ஒரு ஊழியனாக நடந்து காட்டினான்.

திலீபன் மண்ணை தாயா கவே நேசித்தான். அந்தத் தன்



திலீபன் உண்ணாவிரத மேடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் ஒரு தாயார் திலீபனுக்கு திருநீறு பூசுகிறார்.

மையின் ஒளிர்வு பின்நாளில் அவனை எப்படி ஆக்கியது என்ப தெல்லாம் நீங்கள் தெரிந்ததே.

அவனது தன்னலமற்ற அன் புகொள் நெஞ்சம் இந்தப் பிரபஞ் சத்தின் அதிர்வாக இருக்கிறது. மனித வாழ்க்கைப் பேரியக்கம் அன்பின் வழித்தொடரலாய் எம் மில் நின்று பெருகட்டும்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் இனத்தை ஒடுக் குவதை இந்திய அரசிடம் கைமாற்றிக் கொண்ட பொழுது இதை தெட்டத் தெளிவாக அறிந்து கொண்டது எமது விடு தலை இயக்கம். மக்கள் மத்தியில் அதுபற்றி தெளிவாக வலியுறுத்திக் காட்டியது. எனினும் இந் தியா தனது மேலாதிக்க வல்லாண்மையால் தமிழர் களுக்கு உதவும் ஒரு நேச சக்தியாக காட்டி வந்த முகத்திரை கிழிக் கப்பட்டதற்கு காரணம் திலீபனே. கண்ணீர்விட்டு வளர்த்த எமது விடுதலை கருகத் திருவுளமோ?

எப்பாடு பட்டோம்? எப்படிப்பட்டோம்? எமது விடுதலை இயக்கமும் மக்களும் நிகழ்த்திய தியாகங்கள் தான் எத்தனை!

என்ன விளையாட்டா?

இந்திய ஏகாதிபத்தியம், சா ரங்களோடு திரியும் 2000 பையன் களை குட்டிக்கலைத்துவிடலாம் என்று எண்ண வைத்ததெல்லாம், தான் ஏகாதிபத்திய கனவான் என்ற அதன் மயக்கம்தான்.

திலீபன் உண்ணாவிரதம் இருக்கையில் தலைவர் பிரபாகரனுடன் உரையாடும் பொழுது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போர்க் கோலம் பூண்ட மண்ணில், அந்த சூழலில், வேங்கைகள் வாழும் பூமியில், வீரத்தின் விளைநிலத்தில், புனித மண்ணில் தியாகக் கொழுந்து விட்டெரியும் விடுதலைத் தீயை அணைக்க வந்த கரங்கள் சுட்டெரிக்கப்பட்டன. திலீபன் அந்த மண்ணில் முதல் தீக்கொழுந்து.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்" என்று கூறி ஒரு சொட்டு நீரும் அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரலாற்றை பல படிகள் முன்நோக்கி தள்ளினான்.

திலீபன் எமது மக்களின் விடுதலையை நேசித்தான். அல்லும் பகலும் அயராது உழைத்தான். அவனது வாழ்க்கை மண்ணை நேசிக்கின்ற ஒவ்வொரு தமிழீழ மக்களின் இதயத்திலும் நிழலாக நின்று வழிகாட்ட வேண்டும்.



## திலீபனின் தீர்க்கதரிசனம்

"இந்த யாழ்ப்பாணக் கோட்டையில், சிலநூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்தது. அந்தக் கொடியை போத்துக்கேயர் பறித்தெடுத்தனர். போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரும், பின் ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து கடைசியில் சிங்களவர் கைப்பற்றினர். இந்தக் கோட்டையிலே மீண்டும் தமிழ் கொடி அதாவது புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை." என்ற திலீபனின் தீர்க்க தரிசனம் அவன் இறந்த 3வது ஆண்டு நினைவு தினத்தன்று கோட்டையில் விடுதலைப் புலிகளின் உயிர் தியாகங்களின் மத்தியில் புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டதுடன் நிறைவேறியது.



## மானத் தமிழனோடா?

கட்டித் தயிரினால்
முட்டி நிறைக்கின்ற
பட்டித் திடல் எங்கள் பூமி - அதைத்
தட்டிப் பறித்திடில்
ஒட்டியிருக்குமோ
இந்த உயிர் சொல்லுஞ் சாமி!

தங்க நிலாவிலே
எங்கள் நிலாவெளிப்
பொங்குங் கடல் எழில் மின்னும் - திரை
எங்கும் அலை வந்து
தங்கு தடையின்றி
சங்க இசை நலம் பின்னும்!

வெள்ளி..... வெளிவந்து
அல்லி மலர்வதைத்
தள்ளியிருந்தங்கு பார்க்கும் - அந்தச்
'சல்லி' மணலினில்
கள்ளி படர்வதை
எள்ளிச் சிறுபுல்லும் வேர்க்கும்.

கோணை நகரினில்
ஆனை குடிவந்தால்
வீணே கிடந்திடலாமோ? - புலி
ஆணை கிடைத்ததும் நீ
தூணாய் கிடக்கின்றாய்
காணப் புறப்பட்டு வாடா 'ஈழம்'

மு. வே. யோ. வாஞ்சிநாதன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# "தயா" வின்




# கருத்தோவியங்கள் பற்றி.....

இன்று பரவலாக கவனத்திற்பட்டு வரும் ஓவியம் பற்றிய பிரக்ஞை மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்க வேண்டியதுமாகும். ஓவிய இரசனை , ஓவியம் பற்றிய தேடல், புதிய ஓவியர்கள் உருவாகுதல் இவற்றினூடாக புதிய படைப்புகளின் கண்காட்சிகளும், நூல்களும் வெளிப்படுதல் என இது பரிணமிக்கிறது.

இந்தப் பின்னணியில் இன்று நம்முடன் வாழ்ந்து கொண்டு படைப்புத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஓவியர் தயாவும், அவரது காலமும் கோலமும் காட்டூன் சித்திரங்களின் தொகுப்பு நூலின் வரவும் மகிழ்ச்சியைத் தருகின்றன.

இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் ஓவியங்களை வரைய ஆரம்பித்தவர் ஓவியர் தயா அவர்கள். சிறு வயதில் இருந்தே ஓவியங்களைக் கூர்மையாகக் கவனிக்கும் பழக்கமுண்டு. ஆயினும் இந்திய இராணுவம் இங்கிருந்த போது ஏற்பட்ட "சூழலின் இறுக்கம்" தன்னைப் படைப்புந்தல் செய்யத் தூண்டியது என்று கூறுகிறார்.

ஆரம்பத்தில் தத்ரூப ஓவியங்களையே வரைந்திருக்கின்றார். அவற்றில் நிறச்சேர்க்கை, தூரிகையின் நுணுக்கமான பயன், கலைஉணர்வு என்பன தயாவை அப்போதே நம்பிக்கைக்குரியவராக அடையாளம் காட்டிற்று.

நூல்களுக்கான முகப்பு அட்டைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான ஓவியங்களையும் தத்ரூபப் பண்பிலேயே வரைந்திருக்கின்றார். தேடல், படைப்புந்தல் காரணமாகத் தத்ரூப ஓவிய வரைதலில் இருந்து நவீன பாணிக்குத் தாவியுள்ளார்.

ஆரம்பத்தில் வரைந்தவை தவிர இப்பொழுது உள்ளவை நவீனத்துவமான குறியீட்டுப் பண்புகளைக் கொண்டுள்ளனவாகக் காணப்படுகின்றன. நீர் வண்ணத்தைக் கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்களின் வர்ண அமைவு, பார்வையாளனில் உயிர்ப்புடன் ஊறுகின்றது. பார்வையாளன் ஓவியத்துடன் இணைந்து கொள்ளுகிறான்.

"கருத்தோவியங்கள் என்பவை கணநேரச் சிரிப்புக்கு மட்டும் உரியவை அல்ல. கணநேரத்தில் கவனத்தை ஈர்த்து கருத்துக்கு விருந்தாகும்."

"காலமும் கோலமும்" பதிப்பாளர்.



இங்கே கலைஞனும் அவனது படைப்பும் பார்வையாளனில் நட்புடன் உறவடைகின்றன.

போர்க்கால (சமகால) நிகழ்வுகளையும், உணர்வூட்டலையும் பிரதானமாகக் காட்சிப்படுத்தும் தயாவின் ஓவியங்கள் காலப் பிரக்ஞை கொண்ட கலைஞனாகத் தயாவை இனம் காட்டுகின்றன. ஒரு கலைஞனுக்குரிய பண்பு இங்கேதான் அமைகின்றது.



'வெளிச்சம்' முன்அட்டைப் படம்
புரட்டாதி, ஐப்பசி 1991



'வெளிச்சம்' முன்அட்டைப் படம்
கார்த்திகை, மார்கழி 1991

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



'வெளிச்சம்' முன்அட்டைப் படம்
தை, மாசி 1992




தயா தன் படைப்புத் தொழிலின் மேலதிகத் தகுதியாகத் தன்னை ஒரு "கார்ட்டூனிஸ்ட்"டாகவும் அடையாளப்படுத்தியுள்ளார்.


இன்றைய உலகில் முக்கியமாக, அரசியலை விமர்ச்சிக்கும் நேரடித்திறன் கார்ட்டூனுக்கே உண்டு. விகடத்துடன் விமர்சிப்பை வெளிப்படுத்தும் கார்ட்டூன் சித்திரத்தின் வளர்ச்சி எம்மைப் பொறுத்த வரையில் விட்டம் பெருக்காத நிலையிலேயே உள்ளது. எங்களுடைய கார்ட்டூன் உலகில் சுந்தர் (சிரித்திரன்) என்ற வகையில் மட்டுமே அநேகமாக அறியப்பட்டுள்ளது. சூரி என்பவரும் கார்ட்டூன் உலகில் அறிமுகமாகி இருந்தார். ஆனால் பின்னர் அவருடைய கார்ட்டூன்களைக் காணமுடியவில்லை. எனவே எங்களுடைய கார்ட்டூன் உலகை விசாலிக்கத் தயாவின் வருகை நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. இலேசான கோடுகளின் மூலம் கருத்தையும் விகடத்தையும் சேர்த்துத் தருவதில் தயாவின் முனைப்பு முதன்மை பெறுகின்றது.

தயா ஒரு கார்ட்டூனிஸ்டாகவே பரவலான கவனிப்புக்குள்ளாகியவர். ஆனால் கார்ட்டூனிலும் பார்க்க நவீன பாணி ஒவிய முனைப்பே அவரது படைப்புகளில் மேலோங்கி நிற்கின்றது. "தான் ஒரு கார்ட்டூனிஸ்டாகவே வரவிரும்புவதாகவும் சிறுவயதில் இருந்தே கார்ட்டூன் தனது கவனிப்பிற்கும் மனதிற்கும் பிடித்திருந்தது." என்றும் சொல்கிறார்.

ஈழத்து ஒவியக் கலையின் வளர்ச்சி கால ஓட்டத்திற்கேற்ப நவீனத்தன்மையுடன் ஏற்படவேண்டும். அலைக்கழிக்கப்பட்டிருக்கும் தமிழினத்தின் வாழ்க்கையை இருப்புக்கொள்ளச் செய்ய நிகழும் இந்தப் போராட்டத்திற்கு உழைக்க வேண்டும். இந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்த ஒவியம் ஊடகமாக்கப்பட வேண்டும் என்ற முனைப்புடன் தயா தொழிற்படுவதை அவதானிக்கலாம்.

தனது ஒவியத்துறையின் ஊக்குவிப்புகள் "சுயதேடலும் ஒவியம் பற்றிய பரிச்சயமுடையவர்களுடனான அனுபவப் பகிர்வுகளுமே" என்கிறார் தயா.

தேடல் முயற்சியும் கேட்டறியும் பக்குவமும் படைப்புந்தலும் மிகுந்த தயாவையும் அவரது படைப்புகளையும் கௌரவிப்போம்; ஊக்குவிப்போம்.




**"வாசிக்கப்படும் செய்திகளுக்கிடையில் பார்க்கப்படும் ஒரு செய்தியாக இருப்பது-அதாவது ஒரு ஓவியமாக இருப்பது-கார்ட்டூன் விசேட கவனிப்பைப் பெறக் காரணமாக அமைகிறது."**

**நிலாந்தன் - விமர்சகன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## ஆன் றணசிங்கவின் சங்காரம் 1944

பல சர்வதேசக் கவிதைப் போட்டிகளில் பரிசுபெற்ற பெண்மணி ஆன் றணசிங்க. ஜேர்மனியில் பிறந்த யூதப் பெண்ணான இவர் இரண்டாம் உலகப் போர் மூளும் நிலையில், தனது 13 வயதில், ஹிட்லரின் இன ஒழிப்பிலிருந்து தப்பி இங்கிலாந்துக்கு ஓடினார்.

ஹிட்லரின் வதை முகாம்களில் கொல்லப்பட்ட ஆறு மில்லியன் யூதர்களில் இவருடைய பெற்றோரும் அடங்குவர்.

தமக்கும் தம் இனத்துக்கும் நடந்த கொடுமைகளை 'சங்காரம்' என்ற தலைப்பில் கவிதைகளாகத் தரும் ஆன் எதையும் மறக்கத் தயாராய் இல்லை; மாறாக, 'நினைவே நமது கேடயம்' என்கிறார்.

ஒரு சிங்களப் பேராசிரியரை மணந்து, இலங்கையில் வாழும் ஆனுடைய கவிதைகளை, உணர்ச்சி படைத்த எவராலும், நெஞ்சு துடிக்காமல், கண்ணீர் சிந்தாமல் படிப்பது அசாத்தியம்.

இக்கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தருகிறார் கவிஞர் சோ. ப.

1938 நவம்பர் 9 ஆனுடைய வீட்டை ஹிட்லரின் ரகசியப் பொலிஸ் தாக்கியது. தமது எதிர்காலம் சோதனைமிக்கதாவதை உணர்ந்த பெற்றோர், ஆனை வெளியே அனுப்ப முடிவுசெய்தனர். தாயும் மகளும் முத்தமிட்டுப் பிரியாவிடை பெற்றனர். தந்தை எல்லை வரை சென்றார், அது நிரந்தரப் பிரிவாயிற்று.

பெற்றோர் 1941 இல் போலந்திலுள்ள லொட்ஸ் முகாமுக்கும், 1944 இல் ஒஷ்விற்ஜுக்கும் மாற்றப்பட்டனர். இருவரும் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் ஆனுடைய கற்பனையில் தன் தாயின் இறுதிப் பொழுது....

## என் அம்மாவுக்கு....


எந்தக்
கண்காணாத் தூரத்தில்
உன்னைப் புதைத்தார்களோ!
எந்த
சுள்ளென்ற வாடைக்காற்று
கோதுமை ஓட்டின் மீது -
உன் புதைகுழி மீதுள்ள
காய்ந்த
கோதுமை ஓட்டின் மீது -
வீசுகிறதோ
அறியேன், அம்மா!
ஈயமாய்க் கவிந்த
வானத்தின் கீழே
மார்கழி மாதத்துக் காலைப் பொழுதில்
பனியால் நனைந்து,
நடுங்கியபடி,
அம்மணமாய்,
அன்னாய்!
அவ்விறுதிப் பொழுதில்,
என்ன நினைத்தாயோ!
அம்மா,
என்னை நினைத்தாயோ!

ஓ,
உன்னை
எனக்கு
நினைவிருக்கு தென்னுயிரே!
மெழுகுதிரிக்கு மேலே
மெலிந்த கைகளை விரித்தபடி,
கண்கள் ஒளிவீச,
என்னை ஆசிர்வதிப்பாய் -
ஆண்டவர்க்கு மங்களங்கள்!

அங்கே தான், அம்மா
வேதனை - வெப்பியாராம்!
உன் மரணம்
தியாகமாய் இல்லாது
விழலாய் - வியர்த்தமாய்
எதன் முடிவாகவுமில்லாது,
எதன் தொடக்கமாகவுமில்லாது,
விழலாய் - வியர்த்தமாய்


இரத்தக்கண்ணீர் வடிக்கின்றேன்
தாயே!
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றேன்
அம்மா!

www.tamileelamarchive.com




தமிழீழப் பகுதிகளில் சுயசார்பு தொழில் முயற்சியின் ஒரு பகுதியான 'புற்பாய்' உற்பத்தி.





சிறுகைத்தொழில் - மரவேலைப்பட்டறையில் இளைஞரொருவர்!





எரிபொருள்

வேர்வை



அந்நிய மண்ணில் வசந்தம் தேடும் எங்கள் மத்தியில் சொந்த மண்ணில் எழுந்து நிற்கும் இளைய விவசாயி!

# எங்கள்
# எங்கள்
# எழுந்து


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ல், ஏற்றம் இறைத்து
செழிக்க
எங்கள் விவசாயி!





ஆலைகள் எங்கணும் ஆயுதம் செய்வோம்
நல்ல தொழிற் கருவிகள் செய்வோம்!

எத்தனை தடைகள் வந்தாலென்ன
உத்தனை சுமைகள் வந்தாலென்ன
எங்கள் கால்களில் எங்கள் வயல்களில்
மீண்டும் நாங்கள் எழுந்து நிற்போம்!





# தேசம்
# கால்களில்
# ருகிறது!


எரிபொருள் தடைக்களை மாற்றி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆழ வேரோடிய ஆலமரமும் அசைக்க நினைத்த புயல்களும்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் பல பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி இருக்கிறோம்.

வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த பேச்சுவார்த்தைகள் சிலவற்றை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்ப்பது நாளைய தலைமுறைக்கு வழிகாட்டலாக இருக்கும்.

திம்பு, டெல்லி, பெங்களூர், கொழும்பு, யாழ்ப்பாணம் என இப் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

மிகப்பெரிய அழுத்தங்கள், சூழ்ச்சிகள் இவற்றிற்கூடாக எம் இலட்சியத்தை விட்டுக் கொடுக்காமலும், அதேவேளை இதுகுறித்த விழிப்புணர்வுகளுடன் எம்மைப் புரிந்துகொண்டு எமக்குச் சார்பாக நிற்கவைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றினோம்.

பலமுள்ளவனுக்கு பயந்து அவன் சொல்வதற்கு இணங்கி, அதன் பின் அந்த இணக்கத்திற்கு காரணத்தைத் தேடி மக்களை ஏமாற்றுவது ஒருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

நம்பி, ஏமாந்து, கூட நின்றவர்களை (மக்களை)யும் ஏமாற வைத்து அழிவின் பின் விழித்துக் கொள்வது இன்னுமொருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

தனிப்பட்ட நலன், பதவிகளுக்காக எல்லோரையும் ஏமாற்றியும், தம் நலன்களை மட்டும் பார்ப்பதும் ஒருவகைப் பேச்சுவார்த்தையாகும்.

இப்படியான பேச்சுவார்த்தைகளுக்கே இந்தியாவும், சிறிலங்காவும் பழக்கப்பட்டிருந்தன.

ஓரளவு அழுத்தத்தைப் பொறுப்பவர்களை, அது அளவு மீறுகின்ற போது நாம் அழிந்தாலும், அடிபணிய மாட்டோம் என எழுந்து நிற்பவர்களை, நம்பி ஏமாற ஆயத்தமில்லாதவர்களை, தங்கள் தனிப்பட்ட நலனில் நாட்டம் இல்லாதவர்களை, தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் வரை இந்தியாவோ, சிறிலங்காவே சந்தித்ததில்லை.

1985ல் சிறிலங்கா அரசு, நாம் இங்கு தொடர்ந்து நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, தன் இராணுவத்தைப் பலப்படுத்த எண்ணியது.

அதற்காகப் பேச்சுவார்த்தை என நாடகம் ஆடியது.



யோகரட்ணம் யோகி
முத்தமிழ்விழா மலர்
1992

நாம் சிறிலங்கா அரசின் சூழ்ச்சியை விளக்கமாக எடுத்துச் சொல்லியும் ராஜீவ் காந்தியால் சிறிலங்காவைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தியாவின் பூகோள நலன் மட்டுமே இந்திய அரசின் நோக்கம். சிறிலங்கா, இந்திய உதவியை நாடியதும் தன் நலனை முழுமை செய்யும் நேரம் வந்துவிட்டது என இந்திய அரசு எண்ணியது.

எம்மை ஏதோ வகையில் கைகழுவிவிட எண்ணியது.

பூட்டான் தலைநகர் 'திம்பு'-வில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு 'வா' என அழுத்தம் போடப்பட்டது.

முதலில் பேச மறுத்த நாம் இந்த அழுத்தத்தைப் பொறுத்துக் கொண்டு பேசச் சென்றோம்.

அழுத்தம் எல்லை மீறாத வரை பேசலாம் என்பது மட்டும் நோக்கமல்ல; இப்பேச்சுவார்த்தையில் வேறுசில விடயங்களும் எமக்குச் சாதமாக அமைந்தன.

1. தலைமறைவு இயக்கமாக இருந்த நாங்கள், தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டமை.
2. பயங்கரவாதிகள், கொலைகாரர் என எம்மைச் சொன்ன சிறிலங்கா அரசு எம்மோடு பேச நிர்ப்பந்திக்கப்பட்டமை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

3. எமது போராட்டம் பற்றியும், எமது கோரிக்கை பற்றியும் உலகம் முழுவதும் வெளிப்படையாகச் சொல்ல ஒரு தளம் கிடைத்தமை.

சிக்கலைத் தீர்க்கும் நோக்கம் சிறிலங்காவுக்கு இருக்கவில்லை. இராணுவத்தைப் பலப்படுத்த நேரம் அதற்குத் தேவைப் பட்டது.

சிறிலங்கா சற்றும் நியாயமற்ற தீர்வையே வைத்தது. அதேவேளை, நாங்கள் சிறிலங்காவின் நியாயமற்ற தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டி நின்றோம்.

இந்திய அரசின் நலன்களை சிறிலங்கா பேண மறுத்தது.

இந்தியா இரண்டு விடயங்களைப் புரிந்துகொண்டது.

1. சிறிலங்காவுக்கு இன்னும் நெருக்கடி கொடுக்கவேண்டும்.
2. தமிழீழ விடுதலைப்புலிகள் இருக்கும்வரை, தன் எண்ணம் போல் தமிழீழப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும், அல்லது அழிக்க வேண்டும்.

இது இந்திய அரசுடன் எமக்கு வெளிப்படையாக ஏற்பட்ட முதல் தெறிப்பாகும்.

இந்திய அரசு எமக்குப் பாடம் புகட்ட எண்ணியது.

பேச்சுவார்த்தையில் நேரடியாக ஈடுபடாத பாலா அண்ணாவையும் (திரு. அன்ரன் பாலசிங்கத்தையும்) சந்திரகாசனையும் பேச்சுவார்த்தையில் நேரடியாக கலந்து கொண்ட சத்தியேந்திராவையும் நாடு கடத்தியது.

எங்களுக்குப் பாடம் புகட்டி விட்டதாக இந்திய அரசு மகிழ்ந்தது. மீண்டும் எம்மை டெல்லிக்குப் பேச்சுவார்ததைக்கு அழைத்தது.

தலைவர் பிரபாகரன் தலைமறைவானதால் ராஜீவ் விரும்பிய வண்ணம் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கமுடியவில்லை.

இந்திய அரசுக்கு நேரடியாக எமது பலத்தைக் காட்டிய முதல் நிகழ்ச்சி அது.

ராஜீவ் இந் நிகழ்ச்சியை என்றும் மறந்திருக்க மாட்டார்.

காலம் தாமதித்து, நாம் விரும்பிய நேரமே, தலைவர் பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கையில் இருந்து வெளியே வந்தார். அதன் பின்னே பேச்சுவார்த்தை தொடங்கியது.

டெல்லியில் மீண்டும் ஒரு பலப்பரீட்சை.

போர்நிறுத்தம், தீர்வுத்திட்டம் என்றெல்லாம் பேசப்பட்ட போதும் நாம் பல தடவைகளில் கருத்துத் தெரிவிக்க மறுத்தோம்.

எமது அரசியல் ஆலோசகர் பாலா அண்ணா இல்லாமல் எம்மால் கருத்துத் தெரிவிக்க இயலாது எனக் கூறிவந்தோம்.

நடைமுறைச் சிக்கலில் இருந்து இந்தியா விடுபட விரும்பியது. பாலா அண்ணா மீண்டும் இந்தியா திரும்ப ஒப்புதல் தரப்பட்டது.

இது எமக்குக் கிடைத்த இன்னுமொரு வெற்றி.

ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற அமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை, இக்கூட்டில் இல்லாத 'புளொட்' குழுவைத்தவிர மற்றையோரைத் தம் விருப்பப்படி நடக்கச் செய்யமுடியாது என்பதை இந்திய அரசு உணர்ந்துகொண்டது.

இந்திய அரசு மற்றைய குழுக்களை மறைமுகமாக எங்களுக்கு எதிராக வளர்த்தது.

நாம் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தோடு மோதிக் கொண்டிருந்தோம்.

அதேவேளை ஈழத் தேசிய விடுதலை முன்னணி கூட்டில் இருந்த மற்றக் குழுக்கள் இந்தக் கூட்டிற்கு விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட மதிப்பைப் பயன்படுத்தி தம்மை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். யாரும் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராகப் போராட ஆயத்தமாக இல்லை.

சரியான காலத்தில் இவர்களின் துரோகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம்.


இந்திய அரசு எம்மை ஓரங்கட்டி விட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் பயன்படுத்த எண்ணியது.

இந்தியா சொன்னபடி நடப்பவர்கள் அவர்கள்.



விஜயகுமாரதுங்க நல்லெண்ண விஜயமாக யாழ்ப்பாணம் வந்த பொழுது.





ஸ்ரீலங்கா அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருந்தாலும் கூட்டணியினர் எல்லோரின் கருத்துக்களையும் கேட்டு அதன்படி நடப்பவர்கள் போல ஒரு நாடகம் ஆடினார்கள். தங்களைக் காத்துக்கொள்ள விரும்பி ஆடிய நாடகம் அது. எனவே கொழும்பு செல்லமுதல் எம்மோடு கூட்டணியினர் பேச விரும்பினார்கள்.

கூட்டணியின் துரோகத்தனம் எமக்குப் புதியதல்ல. இருந்தும் அவர்களோடு பேசினோம்.

கொழும்பு சென்று 'சமஷ்டி' அமைப்பு ஒன்றைத் தீர்வாக வைக்கச் சொன்னோம். சிறிலங்கா அரசு அதை ஏற்காது; அதையே காரணம் காட்டி, சிறிலங்கா அரசு சிக்கலைத் தீர்க்க விரும்பவில்லை. எனவே தமிழீழம் தவிர வேறுவழியில்லை எனக்கூறி எம் போராட்டத்திற்குச் சார்பாக நில்லுங்கள் என்றோம்.

எதையும் விட்டுக்கொடுக்காமல் பேசுவது என்பது கூட்டணியின் மரபல்ல. எதையும் விட்டுக்கொடுக்கலாம் எனப் பேசுவதே அவர்கள் மரபு.

அம்பாறை, சேருவில தேர்தல் தொகுதிகளை விட்டுக்கொடுப்பது பற்றிப் பேசினார்கள். சிறிலங்கா அரசு, கூட்டணியின் இவ்வளவு விட்டுக்கொடுப்புகளுக்குப் பின்பும் இணக்கம் காண மறுத்தது.

சிறிலங்கா அரசும் கூட்டணியும் இணக்கம் காணும் ஒரு தீர்வை எம்மீது திணிக்கவே இந்தியா விரும்பியது.

கூட்டணி இந்திய அரசு விரும்பிய வண்ணம் நடக்க விரும்பிய போதும் எம்மைக் கண்டு அஞ்சியது.

பெங்களூரில் 'சார்க்' மாநாடு நடக்க இருந்தது. ஜே. ஆர் புதிய தீர்வொன்றை முன் வைத்தார்.

வடக்கு ஒரு மாகாணமாக இருக்கும். கிழக்கு மூன்றாகப் பிரிக்கப்படும். திருகோணமலை சிங்கள மாவட்டமாகும். மட்டக்களப்பு தமிழர் மாவட்டமாகும். அம்பாறை முஸ்லிம் மாவட்டமாகும்.

இத்திட்டத்தில் தாயக் கோட்பாடு மறுக்கப்பட்டது மட்டுமல்ல, திருகோணமலையும் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது.

ஜே. ஆரின் பாதுகாப்பு என்ற பெயரிலும், தூளைமேட்டில் பொதுமக்கள் மீது 'ஈ. பி. ஆர். எல். எவ்' நடத்திய துப்பாக்கிச் சூடுகளால்பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டதையும் சாக்காகக் கொண்டும் எல்லோரிடமும் 'ஆயுதக்களைவு' என்ற பெயரில் ஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

தீர்வை ஏற்கப் போடப்பட்ட அழுத்தம் அது.

பெங்களூரில் வழமையான

"வடமாகாணத்திற்கு உங்களை முதலமைச்சர் ஆக்குகிறோம்" என்றது இந்திய அரசு.

"நான் இப்போதும் வடமாகாணத்திற்கு முதலமைச்சராகத்தான் இருக்கிறேன்" என்றார் தலைவர் பிரபாகரன்.

போட்ட அழுத்தம் போதாது. இன்னும் அழுத்தம் போட வேண்டும். "பறியுங்கள் தொலைத் தொடர்பை" என எம் தொலைத் தொடர்புக் கருவிகளை இந்திய அரசு பறித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள், காலில்விழும் நாட்களை இந்திய அரசு எண்ணத் தொடங்கியது.

காலில் வந்து விழும் விடுதலைப் புலிகளைப் பார்த்துக் காத்திருந்த இந்திய அரசின் காதில் அறை விழுந்தது போல, விடுதலைப் புலிகளின் செய்தி வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், தன்னுயிரைத் தற்கொடை செய்ய முடிவு செய்துவிட்டார் என்பதே அச்செய்தியாகும்.

"நீரின்றி, உணவின்றி சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கத் தொடங்கிவிட்டேன்.

தொலைத் தொடர்புக் கருவிகளை ஒப்படையுங்கள்.

இல்லையேல்,

என்னை என் தாய்நாடு செல்ல விடுங்கள், இதுதான் என்



29.7.87 ல் இந்திய - இலங்கை ஒப்பந்தம்



திலீபனின் உண்ணாவிரதக் கோரிக்கை குறித்துப் பேச்சு வார்த்தை



தொலைத் தொடர்புக் கருவிகள் பறிக்கப்பட்டபோது தலைவர் பிரபாகரன் உண்ணாவிரதம் இருக்கிறார்.

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை சிறிலங்கா அரசு ஏற்க மறுத்தது.

மிரட்டல்கள், அழுத்தங்கள்.

நாம் ஓரளவு அழுத்தத்தைப் பொறுப்போம், அதற்குமேல் எதிர்ப்போம்.

கோரிக்கை. ஏதாவது ஒன்றை நிறைவேற்றும் வரை உண்ணா நோன்பு தொடரும்."

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழீழப் போராட்டத்தையும் தலைவர் பிரபாகரனையும் நேசித்த எம். ஜி. ஆர் இதை எதிர் பார்க்கவில்லை.

நடுவன் அரசின் அழுத்தத்திற்கு எதிராக, சுகயீனம் உற்றிருந்த எம். ஜி. ஆரால் எதுவும் செய்யமுடியவில்லை.

ஆனால், தம் ஆட்சியில், தமிழீழத்தின் தலைவர் சாவதை எம். ஜி. ஆரால் பொறுக்கமுடியவில்லை.

உடனடியாகத் தொலைத் தொடர்புக் கருவிகளை திருப்பித் தரும்படி கட்டளை இட்டார்.

இந்திய நடுவன் அரசு நிலை குலைந்தது.

இது தமிழீழப் போராட்டத்திற்குக் கிடைத்த இன்னுமொரு வெற்றியாகும்.

இந்திய நடுவன் அரசு அடுத்த மிகப்பெரிய அழுத்தம் குறித்து முடிவுகட்டு முன்னரே, இந்திய மண்ணில் ஒரு சிலரை விட்டுவிட்டு தலைவர் உட்பட எல்லோரும் தமிழீழம் வந்தோம்.

"பிரபாகரன் தமிழீழம் சென்று விட்டார்" என நான் 'இந்து' பத்திரிகையின் இணையாசிரியராக இருந்த ராமிடம் கூறிய போது, அவர் கூறிய பதில் "இந்தியாவின் பிடி நழுவிவிட்டது" என்பது தான்.

இந்தியா விடுதலைப் புலிகளை ஓரளவு புரிந்து கொண்டு விட்டது.

இவர்கள் அசாதாரண மிரட்டல்கள், அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதே அந்தப் புரிந்துணர்வு.

எங்களைப் படைப்பலம் கொண்டே பணியவைக்கலாம் என இந்திய அரசு முடிவெடுத்தது.

'இந்தியப் படைப்பலத்தை எதிர்க்க தென்னாசியாவிலேயே எந்த நாட்டிற்கும் துணிவில்லை. விடுதலைப் புலிகள் எதிர்க்கப் போவதில்லை, எதிர்த்தால் இருக்கப் போவதில்லை' என இந்தியா கணிப்பீடு செய்தது.

காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

வடமாராட்சியில் நடைபெற்ற 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணியது.

வடமராட்சி எமது கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுவதைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தது.

பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டார்கள். பெருமளவில் அழிவு நடந்தது.

வலிகாமத்தின் மீது சிறிலங்கா அரசு படை எடுக்கக்கூடாது என இந்திய அரசு கூறியது.

வானில் இருந்து சில உணவுப் பொட்டலங்களைப் போட்டது.

1. புலிகளால் தமிழ் மக்களைப் பாதுகாக்க முடியாது என்ற உணர்வைத் தோற்றுவிக்க முயன்றது.
2. தன்னால் தான் தாக்குதல் நிறுத்தப்பட்டது. தான் தான் தமிழீழ மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றியது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

தனக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவித்து விட்டதாக எண்ணியது. புலிகளை மக்கள் இனி நம்பமாட்டார்கள் என நம்பியது.

தனது நேரடித் தலையீட்டுக்கான நேரம் வந்துவிட்டதென மகிழ்ச்சி அடைந்தது.

'ராஜீவைச் சந்திக்க வாருங்கள்' என எம்மை அழைத்துச் சென்றார்கள்.

"ஒப்பந்தம் ஒன்று செய்யப் போகின்றோம்; நீங்கள் இதில் எதையும் மாற்ற முடியாது" என்றார்கள்.

"ஒப்பந்த நகலைத் தரமாட்டோம்; வாசிக்கின்றோம்" என்றார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போல் நாம் எம் எதிர்ப்பைக் காட்டினோம்.

எல்லோரும் முயன்றும் நாம் இணங்க மறுத்தோம்.

கடைசியில் ராஜீவ் காந்தி எம்மைச் சந்தித்து, எம்மை

## "வெற்றி இல்லாவிட்டால் எமக்கென்றொரு எதிர்காலமே இல்லை"

நாம் மிகவும் பயங்கரமானதும், கஸ்டமானதுமான ஒரு காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றோம். தியாகங்கள் பல செய்ய வேண்டியதும், கடுமையாகப் போராட வேண்டியதுமான, எவ்வளவோ நீண்ட பல மாதங்கள் எங்களுக்கு முன்னால் இருக்கின்றன. உங்களுடைய கொள்கைதான் என்ன? என்று நீங்கள் எங்களைக் கேட்கின்றீர்களா? நான் சொல்லுகின்றேன்:

"எமது கொள்கை போராட்டம் தான். தனி மனித வரலாற்றில் இருண்டதும், இரக்கப்படவேண்டியதுமானதும் -ஒரு காலத்திலும் நடக்காத பயங்கரமான கொடுங்கோன்மைக்கும் எதிராக எங்களுடைய முழுச் சக்தியையும் திரட்டி அத்துடன் இனிமேலும் ஆண்டவன் எமக்குத் தரும் பலத்தையும் சேர்த்துப் போராடவேண்டும் என்பதே நீங்கள் கேட்ட எமது கொள்கை.

அடுத்ததாக எமது நோக்கம் என்ன என்று கேட்கின்றீர்களா? அதற்கு ஒரே சொல்லில் பதிலளிக்கிறேன் -வெற்றி -வெற்றியின் பாதை எவ்வளவு தூரமானாலும் எவ்வளவு பயங்கரமானதாகவும் வேதனைகளும் சோதனைகளும் நிறைந்ததாக இருந்தாலும் வெற்றிக்காக என்ன விலை கொடுக்க நேரிடினும் -வெற்றிதான் எமது நோக்கம். ஏனென்றால் வெற்றி இல்லாவிடின் எமக்கென்று ஒரு எதிர்காலமே இல்லை.

மே 13. 1940 இல் வின்ஸ்டன் சேர்ச்சில் (பிரித்தானிய பிரதமர்) பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அமைதிப்படுத்தி எம் இணக்கத்தைப் பெறமுயன்றார்.

அந்தச் சந்திப்பின் போது எம் நோக்கம், இலட்சியம் பாதிப்புறாத வகையில் இந்திய சிறிலங்கா ஒப்பந்தம் எம்மக்களின் வேணவாக்களை நிறைவு செய்யும் வரை அதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பதாகக் கூறினோம்.

'அமைதிப்படை' என்ற இந்திய அரசின் முகமூடியைக் கிழிக்க நேரம் தேவைப்பட்டது.

வந்தவர்கள் தேவதூதர்கள் அல்ல என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய தேவை இருந்தது.

'தாங்கிகள்', உலங்குவானூர்திகள் எனப் படைக்கலங்கள் குவிக்கப்பட்டன.

'புளொட்', 'ஈ. பி. ஆர். எல். - எவ்', 'ரெலோ' குழுக்களில் இருந்து பிரிந்தவர்களைக் கொண்டு 'ஈ. என். டி. எல். எல்' என்ற புதிய தேசவிரோதக் குழு ஒன்றும் இந்தியாவால் உருவாக்கப்பட்டது.

தேசத்துரோகிகள் குவிக்கப்பட்டார்கள். படை பலம் குவிக்கப்பட்டது. தமிழ் மக்களும், புலிகளும் பயந்திருப்பார்கள் என எண்ணிய இந்திய அரசுக்கு இங்கு காட்டப்பட்ட எதிர்ப்பு ஆத்திரத்தைக் கிளப்பியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் ஆயுத பலம் மூலம் பாடம் புகட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை நோக்கித் துப்பாக்கியால் சுடுவார்கள் என இந்தியப் படையோ, இந்திய அரசோ எதிர்பார்க்கவில்லை.

காலடியில் விழுவோம் என எதிர்பார்த்திருந்த இந்திய அரச படை, கால் வைத்த இடமெல்லாம் நாம் குண்டுகளால் வரவேற்புக் கொடுத்தோம்.

30-7-87 ல் வந்த 'வன்கவர்வுப் படை' 24-3-90 ல் முப்பத்திரண்டு திங்களின் பின் தமிழீழ மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டது.

தமிழீழ மண் வரலாற்றில் சாதித்த மாபெரும் வெற்றி இது.

இந்தியப்படை இங்கிருந்து செல்லாமல் நிலை கொள்ளப்போகின்றது என்பதைப் பிரேமதாசா உணர்ந்தார்.

ஜே. வி. பியின் இந்திய எதிர்ப்பு என்ற பெயரிலான அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தடுக்கவேண்டிய தேவையையும் பிரேமதாசா உணர்ந்தார்.

அது மட்டுமல்லாமல் சிறிலங்காவுக்குள் குழப்பங்களை இந்திய அரசு தமிழீழத்தில் இருந்து கொண்டு உருவாக்க முயல்வதையும் தெரிந்துகொண்டார்.

இந்தியப்படை வெளியேற வேண்டும். யார் துணை இருந்தால் இதைச் செய்யலாம் என நினைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச அழைத்தார்.

சிறிலங்கா அரசோடு என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் பேசமாட்டார்கள் என்பது இந்தியாவின் முடிந்த முடிவு.

அரசியல், இராணுவ, சதுரங்க ஆட்டம் எமக்குப் புதிதல்ல. எனவே புதியதோர் சதுரங்க ஆட்டம் தொடங்கியது.

போர் நிறுத்தம் கேட்போம்; எப்படியும் காப்பாற்றுங்கள் எனக் கேட்போம், தாங்கள் சொல்லும் பல விடயங்களுக்கு இணங்குவோம் எனச் சிறிலங்கா அரசு எதிர்பார்த்திருக்கலாம்.

நாம் போர் நிறுத்தம் கேட்கவில்லை. காப்பாற்றுங்கள் என இறைஞ்சவில்லை.

எங்கள் இலட்சியத்திற்கு இடையூறான எதையும் ஏற்றுக் கொள்ளவுமில்லை.

நாம் கூட இருக்கும் துணிவில் "இந்தியனே வெளியேறு" எனப் பிரேமதாசா முழங்கினார்.

அதேவேளை தான் விரும்பிய வண்ணம் எதையும் எம்மோடு செயல்படுத்த முடியாது என்பதையும் உணர்ந்தார். ஒருபுறம் இந்தியப்படை வெளியேறியது. மறுபு



## விஞ்ஞானக் கண்காட்சி

தமிழீழத்தில் யாழ். பல்கலைக் கழகமும், யாழ் விஞ்ஞான சங்கமும் இணைந்து நடாத்திய விஞ்ஞானக் கண்காட்சி பயன் பல தரும் ஒன்றாக அமைந்திருந்தது. சிங்கள அரசின் பலவித ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தப்பட்ட தமிழ் மாணவ சமுதாயத்தை காலத்தின் தேவைக் கேற்ப ஆர்வமும், அறிவும் உள்ளவர்களாக எதிர்காலத் தமிழீழத்தை நிர்ணயிக்க புது சிந்தனைகளுக்கு வித்திட்டதாக இது அமைகின்றது.

விஞ்ஞானம், மருத்துவம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், கணணி, சமுதாய மருத்துவம் ஆகிய துறைகளை சார்ந்ததாக இக்கண்காட்சி அமைந்திருந்தது.

எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்யத் தூண்டும் ஊக்குவிப்பு தொடர்ந்து இது போல் நடக்க வேண்டும். மாணவர்கள் மட்டுமல்லாது பொது மக்களும், குறிக்கப்பட்ட துறைகளை சார்ந்தவர்களும் இக்கண்காட்சிக்கு வருகை தந்தது, தமிழீழ மக்களின் அறிவுப் பசியை துல்லியமாகக் காட்டுகிறது.

www.tamileelamarchive.com

# தமிழீழ ஆவணக் காப்பகம்

றம் எம்பலத்தை அழிக்கும் திட்டங்கள் தொடர்ந்தன.

1. குடியேற்றங்கள்
2. இந்தியத் தலையீட்டுக் காலங்களிலிருந்து கிடைத்த போர் அற்ற சூழ்நிலை, அதன் மூலம் கிடைத்த பணம், இவை மூலம் சிறிலங்காப் படை பெருமளவில் பயிற்சியளிக்கப்பட்டு, படைக் கலங்கள் வாங்கப்பட்டு, சிறந்த படையணியாக மாற்றப்பட்டு வந்தது.
3. தேசவிரோதக் குழுக்களை எமக்கு எதிராகப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.
4. எங்கள் தனித்தன்மையை செயலிழக்கச் செய்யும் வகையில் அனைத்துக்கட்சி மாநாடு தொடங்கப்பட்டது. 10-06-90 இல் மீண்டும் சிறிலங்காப் போர் வெடித்தது.

"தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள்" எனப் பிரேமதாசா கூக்குரலிட்டார்.

40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அரசியலில் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதே வரலாறு.

"நாங்கள் ஏமாற்றப்பட்டோம், ஏமாற்றப்பட்டோம்" எனத் தமிழ்த் தலைவர்கள் எம் மக்களிடம் வந்து அழுவதைத்தான் நாம் கண்டிருக்கிறோம்.

முதன் முதலில் ஒரு சிங்களத் தலைவன் 'நாம் ஏமாற்றப்பட்டோம்' எனக் கூக்குரலிட்டது எம்மோடு பேசிய பின்பு தான்.

நாம் ஏமாறவில்லை, ஏமாறத் தயாராகவில்லை என்பதுதான் உண்மையாகும்.

இக்கட்டுரையின் நோக்கம் ஒவ்வொரு கட்டப் பேச்சுவார்த்தையையும், அதற்கான சூழ்நிலையையும் விரிவாக ஆராய்வதல்ல.

இப்பேச்சுவார்த்தைகளில் காணப்படும் பொதுவான சில பண்புகளை இனங்காட்ட முயல்வதேயாகும்.

எல்லாப் பேச்சுவார்த்தைகளின் போதும், அப்பேச்சுவார்த்தைகளின் பின்னால் ஒவ்வொரு நாடும் தங்கள் நலன் கருதியே செயல்படுகின்றன என்பதை நாடகங்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் மூலம் எப்போதும் மக்களுக்கு எடுத்துக் கூறி வந்தோம்.

மக்களை என்றும் பிழையாக வழி நடத்தவில்லை.

உதாரணமாக இந்திய அரசு குறித்தும், தேசத் துரோக அமைப்புக்கள் குறித்தும் எம் கருத்துக்களை தமிழீழ மண்ணின் அறிஞர்கள் எனச் சொல்லப்படுவோர் எல்லோரும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

ஏற்றுக்கொள்ள மறுத்தனர் என்பதை விட நம்ப மறுத்தனர் என்றே சொல்லலாம்.

நேரடியாகப் பட்டறிந்த பின்னரே நாம் என்றோ சொன்னவைகளைப் புரிந்துகொண்டனர்.

எம்மீது அழுத்தங்கள் போடப்படும் போதெல்லாம் எம் இலட்சியத்தைப் பாதிக்காத வகையில் விட்டுக்கொடுத்து இணக்கம் காணும் தன்மையை நாங்கள் கொண்டிருந்தோம்.

இதைச் சிலர் விட்டுக்கொடுப்பு என்று சொன்னதும் உண்டு. இவை விட்டுக்கொடுப்புக்கள் அல்ல. தேவையற்று உறவுகளைப் பகைக்க வேண்டாம் என்ற நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகும்.

இதைப் புரிந்துகொள்ளாமல் எம் இலட்சியத்தைப் பாதிக்கும் வகையில் நடக்க முற்பட்டவர்களோடு எவ்வளவு இழப்புக்களைச் சந்தித்தாலும் நாம் போராட ஆயத்தமாக இருந்தோம்.

உயிருக்குப் பயந்து என்றுமே விடுதலையை விலைபேச நாம் தயாராக இருந்ததில்லை.

இப்படியான பொதுவான பண்புகளை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இப்படியான பண்புகளை இனங்காணும் போது இவற்றின் பின்னால் மறைந்து இருக்கும் வேறு சில பண்புகளையும் அடையாளம் காணாமல் எம் போராட்ட வரலாற்றின் வளர்ச்சியை சரியாக அறிய முடியாது.

1. எவ்வளவு கொடுமைகள், அழிவுகளைச் சந்தித்த போதும், நீதியான போராட்டத்தின் பின்னால் உறுதியாக நிற்கும் தமிழீழ மக்கள்.

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது** *(குறள் 647)*

**அவன்-**
செயலைப் பிறப்பிக்கும் சொல் வன்மை உடையவன்-
சோர்வு தெரியாதவன்- துணிவின் உறைவிடம்.
தோல்விக்கு உரியவன் அவன் அல்லன் என்பது
அறிந்தோர் கொண்ட முடிவு!

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன் ஆள் பவர்க்கு** *(குறள் 383)*

நாட்டைக் காக்க முனைவோர்க்கு விரதம் பல தேவை!
விழிப்பு ஒன்று; அறிவு இன்னொன்று-
இவை மட்டும் போதாது-
நினைவிலும், செயலிலும், துணிவு என்ற
திடநெஞ்சம் தேவை!
துணிவு கொண்டவனே நாட்டைக் காக்கும்
உறுதியைப் பெறுகிறான்!

நாக. பத்மநாதனின் 'வள்ளுவர் வழியில் வீரம், மானம்' எனும் கைநூலில் இருந்து.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

2. உலக அரசியலில் சூழ்ச்சியாளர்களை விஞ்சும் சூழ்ச்சியாளர்களாக செயல்படும் அதே வேளை, எங்கள் மண்ணுக்கும் மக்களுக்கும் உண்மையாகத் தன்னலமற்று உழைக்கும் விடுதலை அமைப்பு.
3. எம்நாட்டின் விடுதலைக்காக உயிரைத் தற்கொடையாக எந்நேரமும் தரத் தயாராக இருக்கும் . தலைமையும், போராளிகளும்.
4. 4500 க்கு மேற்பட்ட போராளிகளும் 30,000 க்கு மேற்பட்ட மக்களும் சிந்திய குருதியில் பிணைந்து நிற்கும் உணர்வுகள்.

இவை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் எம் தேசத்தின் வெற்றிக்குப் பின்னாலுள்ள உயிர்த்துடிப்பை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

## குறிப்புக்கள்

1. 18-6-1985 சிறிலங்கா போர் நிறுத்தம் செய்ய இணங்கியது.
2. 08-7-1985 திம்புவில் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது.
3. 12-8-1985 திம்புவில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடங்கியது.
4. 20-8-1985 தலைவர் பிரபாகரன் தலைமறைவானார்.
5. 22-8-1985 திம்புப் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டதாக இந்திய அரசு அறிவித்தது.
6. 23-8-1985 திரு. அன்ரன் பாலசிங்கம் 48 மணி நேரத்துக்குள் இந்தியாவை விட்டு வெளியேறவேண்டும் என இந்திய அரசு உத்தரவிட்டது.
7. 13-7-1986 தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு சென்றது.
8. 06-11-1986 தூளைமேட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தேசத்துரோகிகளால் பொது மகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
9. 08-11-1986 ஆயுதக் களைவு என்னும் பெயரில் ஆயுதங்கள் பெறப்பட்டது.
10. 17-11-1986 பெங்களூரில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.
11. 22-11-1986 தொலைத் தொடர்புக் கருவிகள் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து தலைவரின் உண்ணா நோன்பு தொடங்கியது.
12. 23-11-1986 தொலைத் தொடர்புக் கருவிகள் மீளத் தரப்பட்டதை அடுத்து உண்ணா நோன்பு முடிவுற்றது.
13. 05-1-1987 தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பினார்.
14. 29-7-1987 இந்திய சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
15. 10-10-1987 தமிழீழ இந்தியப் போர் தொடங்கியது.

## இவர்கள் சுதந்திரப் பறவைகள்.




உதய சூரியனுக்கு கட்டியம் கூறுவார்கள்
நிலவுக்குத் தாலாட்டுப் பாடுவார்கள்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று
சுதந்திரப் பறவைகளாய் அணிவகுத்தவர்கள்
இவர்கள் விதி இதுவல்ல
கதியற்ற எமக்கு வழி சமைக்கப் புறப்பட்டவர்கள்
மிதித்த இடத்தில் புல்லும் சாகாத
கொள்கை வழி செல்லும் போராளிகள்.
இவர்களின் -
கொலுசணியும் பாதங்கள் பூட்சுகளினுள் அடக்கம்
வளைக்கரங்களில் A K 47 அழகு செய்யும்
தோள்களில் R. P. G சுமையாகும்
சங்குக் கழுத்திலே சயனைட் மாலை தவளும்
பிறைநெற்றி திலகத்தை வெறுக்கும்
நிரந்தரப் புன்னகை தவளும் வதனம்
மனம் இலட்சிய வேட்கை கொள்ளும்
விழிகள் சிறுத்தையின் சினம் காட்டும்
வரிப்புலிச் சட்டை கம்பீரம் ஊட்டும்
உதிரத்தையும் கண்ணீரையும் ஆகுதியாக்கி
புரட்சிகரமாய் யாகம் செய்பவர்கள்
அழகு மலர்களை எல்லாம் மாவீரர் சமாதியில்
அர்ச்சனைப் பூக்களாக்கி உறுதி கொண்டெழும்
எம் தேசத்தின் பெண் புலிகள்.

இரா. அன்பரசி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# போரும் அதன் சமூகப் பயன்பாடும்

போரின் சமூகப் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் எவை?

போர் என்பதே கொடுமையானது, அது எவ்வித பயன்பாடும் அற்றது என்ற கருத்தை நாம் ஏற்கனவே நிராகரித்துவிட்டோம். சுரண்டலும், மேலாதிக்கமும், ஆக்கிரமிப்பும் இருக்கும் வரை போரும் இருக்கும். இவை முற்றாக அழிக்கப்படும் வரை போரை மனித சமூகத்தால் தவிர்த்து விடமுடியாது. ஆகவே போர் சமூகபயன்பாடு உள்ளதா இல்லாததா என்ற வாதத்தை விடுத்து நாம் இப்போது போரின் சமூகப்பயன்பாட்டை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் எவை என்ற விவகாரத்துக்குள் செல்வோம்.

போரில் ஈடுபடாத, அல்லது நாட்டங்காணாத பகுதியினர் போரில் ஏற்பட்ட அழிவுகளையே ஒரு அளவுகோலாகக் கருதுகின்றனர். இத்தனை உயிர்கள் மாண்டன, இத்தனை மனிதர்கள் அங்கவீனமானார்கள், இத்தனை கட்டடங்கள் பொடிப்பொடியாகின போன்ற புள்ளிவிபரங்களைத் தொகுத்து எடுத்து அதை வைத்துக்கொண்டே போரைப் பற்றிய கணிப்பிற்கு வருகின்றார்கள். இது பொதுவாக மனிதாபிமானப் பார்வை என அழைக்கப்படுகின்றது. இப்பார்வையுள்ளவர்கள் போர் என்ற நிலைமை தோன்றியவுடன் தடுமாறுகிறார்கள். எந்த முடிவும் எடுக்கமுடியாமல் ஊசலாடுகிறார்கள். செயற்படுதன்மை அற்றவர்களாகிறார்கள். எதுவும் செய்யமுடியாத விமர்சகர்களாகவே இருந்துவிடுகிறார்கள்.

அழிவுகளின் பருமனை வைத்துக்கொண்டு போரின் சமூகப்பயன்பாட்டை அளவிடமுடியாது. போர் எப்போதும் சில சமூக சக்திகளை அடக்குகிறது அல்லது அழிக்கிறது. அதேநேரத்தில் வேறு சில சமூக சக்திகளின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு வழிவிட்டுக்கொடுக்கிறது. எந்த சக்தி அழிக்கப்பட்டது அல்லது அடக்கப்பட்டது என்பதையும் எந்த சக்திக்கு சுதந்திரமாக செயற்பட வழி திறக்கப்பட்டுள்ளது என்பதையும் வைத்துக்கொண்டே போரின் சமூகப்பயன்பாட்டை மதிப்பீடு செய்யமுடியும். அதுவே போரின் பயன்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான ஒரே அளவுகோலாகும்.

உதாரணத்துடன் விளக்குவோம். 1ம் உலகப்போர் ஐரோப்பிய நாடுகளிடையே நடந்த நாடு பிடிக்கும் போராகும். உலகவளங்களை தமக்குள் பங்கிட்டுக் கொள்வதற்காக நடந்த போராகும். இந்தப் போரின் ஒட்டுமொத்த விளைவு ஐரோப்பிய முதலாளித்துவம் பலவீனப்பட்டதேயாகும். இந்த நாடுபிடிக்கும் போரில் பங்குகொள்வதைத் தவிர்த்துக் கொண்ட ருஷ்யமக்களும், ஐரோப்பிய மக்களும் ஒன்றிணைந்து ருஷ்யாவில் சமதர்மத்தை நிறுவினார்கள். இவ்விதமாக உலகின் முதலாவது சோஷலிச நாடு தோற்றமுற்றது. ருஷ்யமக்கள் நாடுபிடிப் போரை புரட்சிகரப் போரால் எதிர்கொண்டதன் காரணத்தால் சமதர்மத்தைத் தோற்றுவித்தார்கள். ருஷ்யமக்கள் நாடுபிடிப்போரை புரட்சிகரப் போரால் எதிர்கொண்டிரா விட்டால் அந்தப் போர் எதுவித சமூகப்பயன்பாடும் அற்ற பேரழிவாக முடிந்திருக்கும். ஆனால் சமூகப்பயன்பாடுள்ள ஒரு போராக அரசியலை முன்னோக்கித் தள்ளிய ஒரு போராக மாறியது. இப்போரில் ஐரோப்பிய முதலாளி வர்க்கம் பலவீனப்பட்டது. ருஷ்ய தொழிலாளி வர்க்கம் சுதந்திரமாகச் செயற்படும் வழிவகைகளை ஏற்படுத்திக்கொண்டது.

வியட்னாம்-அமெரிக்க போரில் வியட்னாம் வென்றது. போரின் சமூகப்பயன்பாடு மனிதகுலத்துக்கு சாதகமானதாகியது.

எமது சொந்த தமிழீழ-ஸ்ரீலங்கா போரை எடுத்துக்கொள்வோம். இது நடந்து முடிந்துவிட்ட ஒரு உதாரணமல்ல. நடந்துகொண்டிருக்கும் ஒரு நிகழ்வாகும்.

1950 களிலேயே தமிழீழத்திற்கு எதிரான போர் தொடங்கப்பட்டுவிட்டது. ஆனால் தமிழீழம் அவ்வாக்கிரமிப்புப் போரை தற்காப்புப் போரால் எதிர்கொள்ளல் என்பது ஆரம்பமானதோ 1970

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களின் பிற்பகுதியிலேயாகும். இக்கால இடைவெளியில் சுமார் 25 வருடங்களாக இப் போரின் சமூகபயன்பாடு தமிழீழத்திற்கு தீங்கு பயப்ப தாகவே அமைந்திருந்தது. சரணடையுந் தலைமையும் அண்டிப் பிழைக்கும் போக்குமே ஆதிக்கம் பெற்றிருந் தன. தமிழீழம் என்ற எண்ணக் கருவே தோன்றாதிருந் தது. தமிழீழப் பொருளாதா ரக் கூறுகள் அழிக்கப்பட் டன. தமிழீழப் பிரதேசம் மெல்ல மெல்ல பறிபோனது. தமிழ் இனக்குழும தனித்து வம் கூட இழக்கப்பட்டு வந் தது. இது ஒரு அத்தியாயம்.

தற்காப்புப் போரால் எதிர்கொள்ளத் தொடங்கிய பின் ஆரம்பமான அடுத்த அத்தியாயத்தில் அழிவுகள் முன்பைவிட பலமடங்கு அதிகரித்தன. ஆனால் போரின் சமூகப்பயன்பாட்டுத் தன்மையில் ஒரு குணாம்ச மாற்றம் ஏற்பட்டது. தமிழீழ தேசிய உணர்வு பற்றிக்கொ ண்டது. சரணடைவுத் தலைமைகள் அரசியல் நடைபிணங்களாக்கப்பட்டார் கள். தமிழீழ பிரதேசம்



பாதுகாக்கப்படவேண்டும் என்பது மிக நன்றாக புரிந்துகொள்ளப்பட்டது. தமிழீழ தேசிய பொருளாதாரக் கூறுகள் தோற்றம் பெற ஆரம் பித்தன. பெண்களின் சமூகப் பண்பு புதிய பரிமாணங்களைப் பெறத்தொடங்கியது. இன் னும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவை எல் லாம் போரின் முற்போக்கு சமூகப் பயன்பாடு களாகும்.

சமூகத்தின் அடிமட்ட வர்க்கங்கள் படிப் படியாக மேல்நோக்கி வளர்ந்து வரத் தொடங் குகின்றன. இவ்வளர்ச்சி தடையின்றித் தொடருமா னால்-போரில் தமிழீழம் வெற்றி பெறுமானால் ஒரு சுதந்திரமான, சமதர்ம திசைநோக்கிய ஒரு தேசம் தோன்றும் என்பதில் சந் தேகமேயில்லை.

ஆனால் இப்போரில் தமிழீழம் தோற்குமேயானால் தமிழீழ தேசிய வளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்டுவிடும், தமிழீழ ஒடுக்கப்பட்ட மக் களும் அடக்கப்படுவீர்கள். அப்போது இப்போரின் சமு கப்பயன்பாடு தீமை பயக்கும் ஒன்றாக மாறும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆகவே ஆக்கிரமிப்புப் போரை விடுதலைப் போரால் எதிர்கொள்ளவேண் டும். அப்போது மாத்திரம் தான் ஆக்கிரமிப்புப் போரின் சமூகப்பயன்பாட்டை பல னுள்ளதொன்றாக மாற்றமு டியும். போரைப் போரால் முகங்கொடுப்பதன் மூலமே போரின் தீய அம்சங்களை நல்ல அம்சங்களாக மாற்ற முடியும். இது போர்வெறி யல்ல. இதுதான் போர்வெ றியை முறிக்கும் மருந்து.



ஊரும் மரண ஊர்வலம்
தொடரும் உயிர்ப் பயணம்

மண்ணின் ஆன்மாவைக் காக்கும் போரில் வீழ்ந்து விட்ட விடுதலை வீரர்கள்; மக்களின் உணர்வுகளிலும், செயல்களிலும் உயிர்ப்புடன் மீண்டும் எழுந்து நிற்கிறார் கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## தொடரும் சாதனைகள்!

## தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்.

அண்மைக் காலமாக சிறீலங்கா படைகளின் இழப்புக்கள் தென்தமிழீழத்தில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு அதிரடித் தாக்குதல்களினாலும் படையினரின் இழப்புக்கள் 10 தொடக்கம் 40ற்கு மேலாகவும் உள்ளது. இத் தாக்குதல்களில் பெரும்பாலும் ரோந்து அணிகளே தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. எதிர்பாரத இடத்தில், எதிர்பாராத வகையில் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. சில அணிகள் முகாமிற்கு மிக அண்மையில் வைத்தே தாக்கப்படுகின்றன. நிலைகுலைந்து போயிருக்கும் சிறீலங்காப் படைத் தலைமை அவசர அவசரமாக வடக்கிலிருந்து 4500 இராணுவத்தினரை கிழக்கிற்கு அனுப்பியுள்ளது. விடுதலைப் புலிகளின் வீரமும், தீரமும் நிறைந்த யுத்த முன்னெடுப்புக்களால் சிறிலங்காவின் முப்படைகளும் நிலைகுலைந்து காணப்படுகின்றன.

## "வோட்டர் ஜெட்" அதிவேகப் படகு

தமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக சிறீலங்கா அரசு கூறிக்கொள்ளும் தீவுப்பகுதிகளில் ஒன்றான அராலித்துறையில், அண்மையில் சிறீலங்கா உயர் படை அதிகாரிகள் 10 பேர் விடுதலைப் புலிகளால் அழித்தொழிக்கப்பட்ட பின் இராணுவ, கடற்படை கூட்டுப் பாதுகாப்பின் கீழ் மண்டைதீவு கடற்படை இறங்குதுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "வோட்டர் ஜெட்" என்று அழைக்கப்படும் அதிவேக சக்தி வாய்ந்த படகொன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வோட்டர் ஜெற் அதிவேக கடற்படைப் படகு பலநாடுகளில் கடற் படையினராலும் பாவிக்கப் பட்டுவரும் நவீன தொழில்நுட்பம் வாய்ந்த படகாகும். சுமார் 60 அடி நீளமும், 17 அடி அகலமும் கொண்ட இப்படகு ஆழம் குறைந்த நீர்ப்பரப்பிலும் செலுத்துவதற்கு உகந்தது.

"விடுதலைப் புலிகள், பூரண சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப் பட்ட இப் பகுதிக்குள் சென்று படகினை கைப்பற்றியது எப்படி?, அதனை இயக்கும் தொழிநுட்பத்தை அறிந்து எவ்வாறு இயக்கிச் சென்றார்கள்?" என்ற பல கேள்விகள் சிறீலங்கா கடற்படையினர் மத்தியில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.


## Y - 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

எமது மக்களால் சகடை என அழைக்கப்படும், Y-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை நீங்கள் அறிந்ததே. சிறீலங்கா விமானப்படையிடம் இருந்த மிகப்பெரிய யுத்த விமானம் இதுவாகும். இவ்விமானம் துருப்புக்களை இடமாற்றவும், சிறிய ரக வாகனங்களை ஏற்றிச் செல்லவும், இராணுவ உபகரணங்கள், வெடி பொருட்கள், உணவுப் பொருட்கள் என்பவற்றை ஏற்றிச் செல்லவும், பீப்பாய்க் குண்டுகளை வீசவும் பயன் படுத்தப்பட்டது. குறிப்பாக அவசர தேவைக்காக பொருட்களை காயமடைந்த இராணுவத்தினரை கொழும்பு கொண்டு செல்வதிலும் இதன் பணி முக்கியமானதாக இருந்தது.

சிறீலங்கா விமானப்படையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகள் இதில் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் சிறீலங்கா விமானப்படைக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



கடற்புலிகளால்
கைப்பற்றப்பட்ட
அதிவேக விசைப்படகு
("வோட்டர் ஜெட்").

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com

## தமிழீழ ஆவணக் காப்பகம்

# யாழ் மாவட்ட தொழில் அபிவிருத்தித் திட்டம்...

1991ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் திகதி யாழ் பல்கலைக்கழக தொல்பொருள் நூதன சாலை மண்டபத்தில் இன்றைய சூழ்நிலையில் பொறியியலாளரின் பங்குபற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. அன்று பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. பின்பு சில முக்கிய விடயங்கள் சம்பந்தமாக மேலும் ஆராய்வதற்கு எனக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அப்படி எடுக்கப்பட்ட விடயங்களில் ஒன்று தொழில் அபிவிருத்தி ஆகும். ஆராய்ச்சிக்கு யாழ். குடாநாட்டையே முதலில் எடுப்பதாக முடிவு செய்யப்பட்டது.

இன்றைய கணிப்பீட்டின்படி 1991ம் ஆண்டு முடிவில் யாழ். குடா நாட்டில் 8, 44, 807 பேர் இருப்பதாகவும், 2, 20, 000 பேர் மட்டில் இடம் பெயர்ந்தோர் எனவும் 4, 40, 000 பேர் வலிமையுடையவர்கள் எனவும் எடுத்துள்ளோம். சூழ்நிலை காரணமாக குடாநாட்டை விட்டு 2, 00, 000 மக்கள் அகதிகளாய் போயுள்ளனர். அவர்களில் திறமையுடையோரின் விகிதாசாரம் தற்போது இடம் பெயர்ந்து குடா நாட்டில் அகதி முகாம்களிலும், மற்றும் இடங்களிலும் வசிக்கும் மக்களுடன் ஒப்பிடும்போது கூடவாகவே உள்ளது என்பதை கணக்கில் எடுத்துள்ளோம். அதாவது போராட்டம் உச்சக்கட்டத்தை அடையும்போது பல புத்திஜீவிகள், திறமைசாலிகள், வசதியுடையோர் குடா நாட்டைவிட்டுப் பிற நாடுகளுக்குப் போய் விட்டார்கள். அதேநேரம் தற்போது குடாநாட்டில் அகதிகளாக வசிப்பவர்கள் அநேகமானோர் திறமை குறைந்த வசதியற்ற மக்களேயாகும். பிற மாவட்டங்களிலிருந்து இம்மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்தவர்களும் இதனில் அடங்குவர். தொழில் அபிவிருத்தியை நோக்கும் போது, தற்போதைய பொருளாதாரத் தடை அமுலில் இருக்கும் நேரத்தில் என்ன செய்யலாம் என்பதையே ஆராய்ந்தோம். இக் கட்டத்தில் பலர் மாற்றுத் தொழில் செய்ய வேண்டியும் நேரிடும். இது தவிர்க்க முடியாத நிலையாகும் என்பதையும் எடுக்க வேண்டும்.

வேலை செய்யும் வலிமையுடையவர்கள் 4, 40, 000 பேர். அவர்களில் 1, 96, 000 பேர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். மிகுதியாக வேலையில் உள்ளோர் 1, 65, 000 பேராகவும், வேலையற்றோர் 79, 000 பேர் ஆகும். இந்த வேலையற்றோர் தொகையில் மீன்பிடி, விவசாயம், உற்பத்தி சேவை போன்ற பிரிவில் இருந்தவர்கள், போர்க்காலச் சூழ்நிலைக்கு முன் வேலையற்று இருந்தோரும் அடங்குவர். தற்போதைய சூழ்நிலையில் தொழில் அபிவிருத்தி செய்யக்கூடிய விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு , சந்தைப்படுத்தல், காடு வளர்ப்பு, சீவல் தொழில், உணவு பதனிடுதல், நீர்ப்பாசன வேலைகள், கல்வித்துறை, காவல்துறை, போக்குவரத்து, சுகாதாரம், பாவனைப் பொருட்கள் உற்பத்தி எனக் குறிப்பிடப்படும் துறைகளில் வேலையற்றோரான 79, 000 பேருக்குமான வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளலாம் என இவ் ஆய்வு தெரியப்படுத்துகின்றது.

வேலைவாய்ப்புக்களை கொடுக்கும் அமைப்புகள் யாவும் வேலைக்கேற்ற ஊதியத்தை அமுலாக்க வேண்டும். மேலும் இவ் வேலைகளில் சில தொடர்ச்சியான வேலைகள் அல்ல. அப்படியாக வேலையற்றுப் போகும் காலங்களில் வேலை வங்கியில் மீண்டும் தம்மை பதிவு செய்து நிவாரணத்தைப் பெறவும் மாற்று வேலையில் விரைவில் அமரவும் ஆவன செய்து கொடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட சட்ட மூலங்களும் உருவாக்கப்பட வேண்டும். இத்திட்டம் அமுலாக்கப்பட உடனடியாக வேலை வங்கி ஆரம்பிக்கப்பட்டு மேலும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். ஆரம்ப நிதியாக 1, 00, 000 ரூபா ஒதுக்கீடு செய்ய வேண்டும். இத்திட்டம் முதலில் தேசிய கொள்கையாக ஆக்கப்பட்டு சகல அமைப்புக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும் என்று அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 1
## பரிசு பெற்றோர் விபரம்

1 ம் இடம்:
சி. சிவஞானசுந்தரம்
HUMBOLDT STR 141,
8500 NURNBEG 40,
B. R. D.

2 ம் இடம்:
K. அரியநாயகம்
SAAR BRUCKERSTR 10,
6604 BREBACH,
GERMANY.

3 ம் இடம்:
K. சிறீஸ்காந்தன்
C/O S. VIJAYAKANTHAN,
4, RUE CHAMPIONNET,
75018 PARIS.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# அங்கீகாரத்தை நோக்கி தமிழீழம்

புதியவன்

ஒரு தேசிய இன மக்கள் தமது சுயநிர்ணய உரிமையின் அங்கீகாரம் வேண்டி தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது சர்வதேச சமுதாயம் கூர்மையாக அவ்விடுதலையை அவதானிக்கும். தம்மை ஆக்கிரமிக்கும் நாட்டிலிருந்து விடுதலை பெற்றால் அந்த மக்கள் சுயமாக தம்மை நிர்வகித்து வாழ முடியுமா என்ற கேள்வி அங்கீகாரம் கொடுக்கும் நாடுகள், அமைப்புக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததும் நியாயமானதுமாகும்.

வவுனியாவிலிருந்து சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தமிழிழத்திற்குள் நுழையும் பொழுதே தமிழீழ எல்லைக் காவற்படை, தமிழீழ இராணுவம், தமிழீழ உள்நுளைவு வெளிவரவு பதிவுப் பணியகம் அவற்றால் வழங்கப்படும் அடையாள அட்டை, பொது நிர்வாகம் என்பவற்றிலிருந்தே நாம் தமிழீழம் என்றொரு புதிய நாட்டுக்குள் நுழைவது போன்றொரு உணர்வு ஏற்படுகின்றது. இவை அத்தனைக்கும் சிகரம் வைத்தால் போல் அமைந்துள்ள, தமிழீழக் காவல்துறை, தமிழீழக் காவல்துறைக்கென்றே ஒரு தனித்துவமான சீர் உடை, அதில் இடப்படும் அடையாளச் சின்னம், தமிழீழ மக்களுக்கென்றே அவர்களால் ஆக்கப்பட்ட சட்டம் என்பனவாகும். தேசிய நலனைக் கருத்தில் கொண்ட ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய தமிழீழ நாட்டின் காவல்துறையாக அது இயங்குகின்றது. கிழக்கு மாகாணத்தில், விடுதலைப் புலிகளின் உக்கிரமான தாக்குதல்களும், முன்னேற்றங்களும் கிழக்கு மாகாணம் முழுவதையுமே அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துகின்றன. அவ்வாறு அமையுமாயின் இங்குள்ளது போன்ற சிவில் நிர்வாகம் அங்கும் உடனடியாக பரவலாக்கப்படும். விடுதலைப் புலிகளின் போராளிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் வெறும் போராளிகள் மட்டுமல்ல, கையில் துப்பாக்கிகள் வைத்திருக்கும் பொது நிர்வாகஸ்தருமாவார். அங்கு முன்னர் அரசாங்கத்தால் அறவிடப்பட்டு வந்த வரி முதலியன இவர்களால் அறவிடப்படுகின்றன. அங்கு ஒரு எழுதுவினைஞருக்கு பேனா எந்தளவிற்கு முக்கியமோ அந்தளவிற்கு ஆயுதமும்




காவல்துறையினரின் அணிவகுப்பை தலைவர் பிரபாகரன் பார்வையிடுகிறார்.



www.tamileelamarchive.com

முக்கியமாகிறது. தீவுப் பகுதியில் புகுந்துள்ள சிறிலங்கா இராணுவம் அங்குள்ள வயோதிபர்களைப் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு அந்தரத்தில் நிற்கிறது. அவர்களால் ஒரு அடி கூட யாழ். நகர் நோக்கி நகர முடிய வில்லை, முடியாது. கிழக்கு மாகாணமும் பறிபோய்விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தும் சிங்கள அரசு புலிகளின் கவனத்தை திசை திருப்பவும், சிங்களப் படையினரின் இழப்புக்களுக்கு எதிர்க்கட்சிகள், பௌத்த குருமார்கள், சிங்கள மக்கள் இவர்களைத் திருப்திப்படுத்தவும் வடமாகாணத்தில் தாக்குதலை வலிந்து தொடர்கிறது. எது எப்படி இருப்பினும் சிறிலங்கா இராணுவத்துடன் ஒப்பிடும்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய இராணுவத்திடம் போதிய ஆயுதம் மட்டுமல்ல அனுபவம், தந்திரம், தன்னம்பிக்கையும் காணப்படுவதால் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதென்பது இயலாத காரியம். இதேவேளை, நீண்டகால நோக்கில் வட பகுதியில் பாரிய நடவடிக்கைகள் அரசைப் பலவீனப்படுத்தும் என்பதே உண்மையாகும்.

பேச்சு வார்த்தையைப் பொறுத்த மட்டில் தமிழீழத்திலுள்ள பொது மக்கள், கல்விமான்கள், அரசியல் அவதானிகள் போன்றோரின் கருத்தாவது சிங்கள அரசாங்கம் தமிழர் பிரச்சனைக்கு ஒரு உருப்படியான நிரந்தர தீர்வோ அல்லது ஒரு மாற்றுத் திட்டமோ முன் வைக்கவில்லை என்பதாகும். இந்நிலைமையில் பேச்சுவார்த்தை என்பது வெறும் கேலிக் கூத்தே. ஈழத் தமிழரைப் பொறுத்த மட்டில் இன்று விடுதலைப் புலிகளை ஒரு தேசிய இயக்கமாகவும் அதன் தலைவரை ஒரு தேசியத் தலைவனாகவும் ஏற்றுக் கொண்டு சரியான ஒரு தலைமையின் கீழ் அணிவகுத்து நிற்கிறார்கள். இதனால் தமிழீழ விடுதலை பெறுவது நிச்சயம் ஆகின்றது. சிங்கள மக்கள் மத்தி

தமிழீழக் போக்குவரத்துக் காவல்துறை



விடுதலைப் புலிகள் ரோந்து அணி.



மரபுரீதியான ஆனையிறவு சமர் திட்டமிடல்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


யில் ஒரு சரியான தலைமை இன்னும் தோன்ற வில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில் அடுத்த தேர்தல்தான் முக்கியம். தமிழீழப் பிரச்சனையைத் தீர்க்கவோ நாட்டு நலன் கருதி ஒரு சரியான முடிவை எடுக்கவோ முடியாது. பேச்சுவார்த்தையின் மூலம் தமிழீழப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைக்குமானால் அதை விடுதலைப் புலிகள் வரவேற்பார்கள். ஆனால் அது எவ்வாறு சாத்தியமாகும்? சிங்கள அரசாங்கம் பேச்சுவார்த்தை எனக் கூறிக் கொண்டு, இராணுவத் தீர்வில்தானே நம்பிக்கை வைத்துள்ளது. இந்நி லைமையில் தொண்டமான் பேச்சுவார்த்தை நாடகம் முடிவடைந்தது. பின்னர் பௌத்த குருமார் வந்தனர். பேச்சுவார்த்தை நடக்கட்டும். ஆனால் ஆயுதங்களை போட்டுவிட்டு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த் தைக்கு உடன்படுவார்களானால் அது தமிழ் மக்களை நடு ஆற்றில் விட்டதற்கு சமனாகும். தமிழீழ விடுத லைப் புலிகள் ஒரு முறை இந்தியாவின் நல்லெண் ணத்திற்கு மதிப்புக் கொடுத்து இந்தியாவிடம் ஆயுதங் களை ஒப்படைத்ததால் அவர்களின் பாதுகாப்பிற்கும், மக்களின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதமில்லாமல் போனதை மறந்து விடமாட்டார்கள். ஆயுதங்களை வைத்திருக்கும் போதுதான் புலிகள் மக்களை பாது காக்க முடியும். சிங்கள அரசாங்கம் பேச்சுவார்த் தைக்கு வருவது ஆயுதங்களைப் பறிப்பதற்குத்தான். பேச்சுவார்த்தையில் ஆயுதங்களை ஒப்படைக்க வேண் டுமென நிபந்தனை இடப்படுகிறதே தவிர தமிழ் மக்க ளின் சுயநிர்ணய உரிமையை உணர்ந்து ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. நிபந்தனையற்ற ஒரு பேச்சு வார்தை இடம் பெறுமானால் அதன் மூலம் ஒரு தீர்வு கிட்டாவிட்டாலும் சிங்கள அரசாங்கத்தின் நிலைப் பாட்டை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்ட இது இன்னொரு சந்தர்ப்பமாகத் தோன்றக் கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளை அணுகியபோது அவர்கள் சிந்திய துளிகளில் தென் பட்ட கருத்துக்கள், தேசிய விடுதலைப் போராட்ட உணர்வினைப் பிரதிபலிக்கின்றன. அங்கு தேசியத் தலைவனின் தலைமையின் கீழ் அணிவகுத்து நிற்கும் ஒரு தேசியப் போர்ப்படை, ஒரு நாட்டின் மரபு ரீதி யான இராணுவமாக வளர்ந்து வருகின்றது. அவர்கள் தமது உயிரினிலும் மேலாக போராட்டத்தை நேசிக்கி றார்கள் என்பதை அவர்களது தெளிவான, உறுதியான நடை, பேச்சு, பாவனைகள் புலப்படுத்தின. அவர்கள் கழுத்தில் கறுப்புக் கயிற்றில் தொங்கும் சயனைட் குப்பிகள் அவர்களது இலட்சிய வேட்கையைவெளிப் படுத்தின. ஆனையிறவுப் போர், எமது போர் முறைக் குக் கிடைத்தவொரு வெற்றியெனவும், நேருக்கு நேர் இரு நாடுகளுக்கிடையில் நடந்த ஒரு யுத்தம் எனவும், விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்தவர்கள் என்பதையும் உணர்த்தி நின்றது. சகல வழிகளினாலும் பிற நாடுக ளின் உதவியைப் பெற்ற ஒரு அரசாங்கத்திற்கு, ஆனையிறவுப் போரை முறியடிக்க எடுத்த காலமும் அதற்குக் கொடுத்த விலையும் மிக மிக அதிகம். அதாவது சிறிலங்கா அரசாங்கம் தானாகவே உலக

## எதுநாள் வரைக்கும் நாமும் நமது துயரமும்?

வேட்டொலியும் குண்டுச் சத்தமுமாய்
நீண்ட இரவு
மெல்லப் புலர
கிழக்குத் திசையின் தொலைவிலிருந்து
காலைக் கதிர்கள்
எட்டிப் பார்க்கும்.

இந்த காலைச் சூரியன்
எந்தப் போர்க்களத்தில்
குளித்து வந்தது
இரத்தச் சிவப்பாய் ஈரம் காயாமல்.

இடுப்பில் குழந்தை, தலையிலும்
தோளிலும் சைக்கிளின் முதுகிலும்
மூட்டை முடிச்சுடன்
விரக்தியும் வெறுமையும் முகத்தில் பூசி
அவசர அவசரமாய்
ஒழுங்கை முகப்பைக் கடந்து
பள்ளிக்கூடம், கோயில் மண்டபம்
அன்றி, ஒரு மரத்தின் நிழல்
தேடும் இலக்கில்
பரபரத்து விரைகின்ற கால்கள்...

'நாசமாய் போவாங்கள்....'
கிழவி ஒன்று காற்றின் திசையில்
மண்ணை வீசி
கண்ணீர் மல்க சபித்துப்போக...

தெருவின் எல்லையில் நின்று
திரும்பிப் பார்த்து
ஓங்கிக் கல்லெறிந்து
புறங்கையில் கண்துடைத்து
நகரும் சிறுவன்.

இன்னும் விட்டுவிட்டுக் கேட்கின்ற
வெடிச்சத்தங்களை மீறி
பட்டமரத்தின் கிளையமர்ந்து
தனிமையில் கரைந்து
அழுகின்ற காகம்....

சீமைக் கிளுவை வேலி எரிந்து
கருகிய மட்டை
உதிர்த்த சாம்பலை மீறி
துளிர்த்து நிற்கும்
பசிய முளையில் பார்வை தெறிக்க
கீற்றாய் ஒளிர்ந்து
நம்பிக்கை வேர் தழைக்கும்.

நேற்றுவரைக்கும், மனித
கால்கள் அழுந்தி சிலிர்த்த
எங்கள் கிராமம் ஏகாந்த வெளியாய்
வெறிச்சிட்டுக் கிடக்கும்
நாளை வரைக்கும்.

- கஜன் -

www.tamileelamarchive.com

# தமிழீழ ஆவணக் காப்பகம்

நாடுகளுக்கு விடுதலைப் புலிகளின் பலத்தை எடுத்துக் காட்டியுள்ளது. விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவ நிலையை சிறிலங்கா அரசாங்கம் இரண்டாவது தடவையாக உலகுக்கு எடுத்துக் காட்டியது. முன்னர் இந்திய அரசாங்கத்தினால் கொலு வைக்கப்பட்ட முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் பதவியிலிருக்கும் போதே அவருடன் பேச்சு வார்த்தை நடத்தாது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதிலிருந்து, விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டது. பின் ஆனையிறவுப் போரின் போது அதனை முறியடிக்க எடுத்த நாட்களும் அதற்கு கொடுத்த விலையும், விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்தவர்கள் என்பதையும், அவர்கள் உலகின் தலை சிறந்த கெரில்லாப் போர் வீரர்கள் மட்டுமல்ல தேசிய மரபு ரீதியான ஒரு போருக்கு தகுதியானவர்கள் என்பதையும் எடுத்துக் காட்டியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தில் கையாளும் முறைகள், சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்களை பொது மக்கள் மத்தியில் அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக ஒப்படைக்கும் முறை, இறந்த இராணுவத்தினரின் உடல்களை ஒப்படைக்கும் விதிகளுக்கு என்பன சர்வதேச யுத்த முறைக்கு ஏற்றதாகவே அமைகின்றன.

தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிக்குள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் எந்தவித அதிகாரத்தையும் செலுத்த முடியாது. அவசரகாலச் சட்டமும், ஊரடங்குச் சட்டமும் அங்கு செல்லுபடியாகாது. புலிகளின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள பகுதியில் மட்டும்தான் சிங்கள அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்த முடியும். விடுதலைப் புலிகள் ஆணையிட்டாலே தவிர மற்ற எதுவும் அங்குள்ள மக்களை கட்டுப்படுத்த மாட்டாது. சிங்களப்பகுதியில் சிங்கள தீவிரவாத இயக்கங்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு தொழில் நிலையங்கள் செயற்படவில்லை. குறிப்பாக பாடசாலைகள் ஓராண்டுக்கும் மேலாக மூடப்பட்டே காணப்பட்டன. ஆனால் இங்கு பாடசாலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பொது நிர்வாகம் தொடர்ந்து நடைபெறுகின்றது. உள்ளூர் உற்பத்திகள் பெருகுகின்றன. நாம் ஆடுவதையும், பாடுவதையும் எம் சுதந்திர பூமியில் யாராலும் தடுக்க முடியாது என்பது போல் கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. தமிழ் இசை விழாக்களும், முத்தமிழ் விழாக்களும், மேதின எழுச்சி போன்ற ஊர்வலங்களும் சமூக சமய கொண்டாட்டங்களும் வழமைபோல் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. மின்சார வசதியில்லாத பொழுது ஜெனரேற்றர் (Generator) மூலம் இவ்விழாக்களும், கொண்டாட்டங்களும் பொலிவு பெறுகின்றன.

> ஒரு திடமான, தனித்துவமான தேசிய ஆளுமையைக் கொண்ட மக்களாக தமிழீழ மக்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறார்கள். இரத்தப்புரட்சியாக கட்டவிழ்ந்த, நீண்ட, கடினமான போராட்ட வரலாறும், அதனால் உருவான நிலை தளராத இலட்சிய உறுதியும், நாட்டுப் பற்றும் எமது மக்களை தேசிய ஆளுமை கொண்ட மக்கள் இனமாக மாற்றியமைத்திருக்கிறது. இதனால் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்களாக, தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.
>
> தலைவர் வே. பிரபாகரன்.

இயற்கை மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து புதுப் புது மருந்துகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இங்குள்ள மக்களின் பிரயாசையையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் எடுகும் அரசியல், பொருளாதார, சமூக முன்னெடுப்புகளையும், அவற்றை நேர்மையாக ஆற்றும் செயல்திறனையும் பார்க்கும் பொழுது தமிழீழம் முழுவதும் விடுதலைப் புலிகளின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தால், ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் தங்கியிருக்காது தமிழீழம் சுபீட்சமாக, சுயமாக வாழ முடியுமென்பதைக் காட்டுகிறது. இங்கு உருவாகும் மாணவர் அமைப்புகள், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், மகளிர் ஆய்வு நிறுவனம், சிறு குடிசைக் கைத்தொழில் ஊக்குவிக்கும் அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியனவும் அவற்றால் இடப்படும் குறுங்கால, நெடுங்கால திட்டங்கள் ஆகியவற்றையும் நோக்கும்போது நம்பிக்கை ஏற்படுகின்றது. தமிழீழ மக்களின் ஒருமைப்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக இருந்த சாதி, மத வேறுபாடுகள் மறைந்து வரும் வேகமும் ஒரு சுதந்திர சமதர்ம தமிழீழத்தை சமைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இப்பகுதிகளை கூர்ந்து கவனிக்கும் சர்வதேச பொது அமைப்புக்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள் ஆகியன, தமிழீழம் முழுவதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வரும்பொழுது மொழி, கலை, பண்பாடு, பொருளாதாரம், ஜனநாயக உரிமைகள், வெளிநாட்டு உறவுகள் ஆகியன சிறந்த முறையில் பேணப்படுவதாக தமிழீழம் அமையும் என்பதை ஒத்துக் கொள்வார்கள். இது எமது சுதந்திர நாட்டின் அங்கீகாரத்துக்கு வழி வகுக்கும்.

அத்தகு நாட்டை அங்கீகரிக்கச் சர்வதேச உலகம் தவற மாட்டாது என எம்மக்கள் நம்புகின்றார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# நினைவில் சில நிகழ்வுகள்

மேஜர் கிண்ணி



அன்று தண்ணீர் ஊற்று ஆலடிச் சந்தியில் எனது குழுவினரும் நானும் வைத்த கண்ணிவெடியினை இந்திய இராணுவத்தினர் ஓர் தேசவிரோதியின் உதவியினால் கைப்பற்றிவிட்டனர்.

அக்கண்ணிவெடியினை மீளக்கைப்பற்றும் முயற்சியாக நானும் எனது குழுவினர் மூவருமாக மொத்தம் நால்வர் தனித்து நின்று 75 க்கும் மேற்பட்ட இந்தியச் சிப்பாய்களுக்கெதிராகப் போரிட்டோம். பெரிய ஏவுகணைகள், மோட்டார்கள், GPMG, LMGகள் சகிதம் எமை எதிர்த்த இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராக நாங்களோ! எனது கையில் G3 துப்பாக்கியும், எனது தோழர்கள் இருவரிடம் AKயும் ஒருவரிடம் SLR ம் மாத்திரமே வைத்துப் போராடினோம்.

இறுதியில் மேலும் இந்திய இராணுவத்தினர் அப்பகுதியை நோக்கி நாலா திசைகளிலும் குவிக்கப்பட்டனர். இதனால் 2 மணி நேரத்திற்குப் பின் எமது தாக்குதலை இடைநிறுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து பின்வாங்கினோம்.

தாக்குதலில் இருந்து பின்வாங்கிய நாங்கள் குளக்கரையில் அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்திருந்த எமது பிரதான முகாமிற்கு சென்றோம். அங்கு நாங்கள் எதிர்பார்த்ததை விட அமோகமான வரவேற்பு காத்திருந்தது. நாங்கள் சக்கையை விட்டு விட்டு வந்ததற்கு எமது சக குழுவினரும் அப்போதைய முல்லை மாவட்ட தளபதியுமான லெப். கேர்ணல் நவமும், என்னையும் எனது குழுவினரையும் சகலவிதமான முறைகளிலும், நக்கல் (நையாண்டி) செய்தும் கேலிப் பேச்சு பேசியும் வரவேற்றனர். காட்டில் (எமது வீட்டில்) நாங்கள் வாரந்தோறும் நடத்தும் கலை நிகழ்ச்சியிலும் எம்மை கேலி செய்து எமக்கிடையிலிருந்த ஒற்றுமையையும், புரிந்துணர்வையும், தோழமையையும், சகோதர பாசத்தினையும் எவராலும் பிரிக்கமுடியாதவாறு வலுப்படுத்திக்கொண்டார்கள்.

எங்களின் இவ் ஆயுத ஒப்படைப்பால் (இச்சம்பவத்தை எல்லோரும் ஆயுத ஒப்படைப்பு என்றே கேலியாகப் பேசுவார்கள்) எனது குழுவினர் 15 நாட்களுக்கு எந்தவிதமான தாக்குதலுக்கும் போகக்கூடாது என்று எமது தளபதியால் பணிக்கப்பட்டோம். அப்பதினைந்து நாட்களிலும் நாங்கள் முகாம் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபட்டோம். "வெளியில் சண்டை நடந்துகொண்டிருக்கும் போது சண்டைக்குச் செல்லவிடாது மறித்து வைப்பதுதான் ஒரு வீரனிற்கு மிகப்பெரிய தண்டனை." என்ற உண்மைய அந்தப் பதினைந்து நாட்களில் எமது குழுவினரும் நானும் உணர்ந்து கொண்டோம்.

இப்பதினைந்து நாட்களுக்குப் பின் எங்களுக்கு தாக்குதல் நடாத்துவதற்கு அனுமதியளிக்கப் பட்டது.

எனது குழுவினர் தாக்குதல் நடத்துவதற்கான இடங்களை வேவு பார்ப்பதற்கென தோழர்களைப் பல இடங்களுக்கும் இருவர் இருவராக அனுப்பிவிட்டு நானும் இன்னுமோர் போராளியும் நெடுங்கேணிப் பகுதியில் இராணுவ நடமாட்டத்தை வேவு பார்க்கச் சென்றோம்.

அங்கு எட்டு நாட்கள் தங்கியிருந்து வேவு பார்த்து மூன்று

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நிலைகளில் இராணுவத்தினரை தாக்குவது என முடிவு எடுத்தோம்.

1. நெடுங்கேணி பிரதான முகாமிற்கு 300 மீட்டர் தொலைவில் உள்ள பாடசாலையில் அமைந்துள்ள மினிமுகாமை தாக்குதல் அல்லது

2. ஒலுமடுவிற்கு ரோந்து செல்லும் இராணுவத் தொடரணியை இடையறுத்து தாக்குவது அல்லது

3. நெடுங்கேணி பிரதான முகாம் ஒட்டுசுட்டான் றோட்டில் உள்ள பிரதான காவல் அரண்கள் இரண்டைத் தாக்குவது

என்ற முடிவோடு எனது குழுவினரைச் சந்தித்தோம். அவர்களுடன் கதைத்து ஒரு முடிவு எடுத்ததில் எல்லோரும் நெடுங்கேணி பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவ முகாமைத் தாக்குவதுதான் எமக்கு பல வழிகளிலும் நன்மை தரும் என்று முடிவெடுத்தோம்.

இத்தாக்குதலுக்கான வேவு நடவடிக்கைகளில் 8 நாட்களையும் முட்பற்றைகளிலும், கட்டிடத்தின் மேற்கூரைகளிலும், நீரும் சேறும் நிறைந்த வாய்க்கால்களிலும், சாப்பாடு, தண்ணீர், இன்றிப்பட்டினியாக இரவு பகல் நித்திரையின்றி கழித்தோம். எந்நேரமும் இந்தியச் சிப்பாய்களின் வடமொழிப் பாசையும் காலிலே அணிந்துள்ள இராணுவப் பாதணிகளின் ஓசையும் அந்த எட்டு நாட்களுக்குள் எங்களுக்கு நன்றாகப் பழகிவிட்டன. கிடைக்கின்ற ஒரு சில சமயங்களை எமது ஆதரவாளரான ஒரு மூதாட்டியின் சிறு குடிசையில் கழிப்பதுண்டு. அந்த எட்டு நாட்களும் அந்த மூதாட்டி அளித்த சாப்பாட்டையே அமிர்தமாகக் கொண்டு எமது வேவு நடவடிக்கையைத் துரிதப் படுத்துவோம். எம்மால் அடக்கமுடியாதவாறு பசி வாட்டினால் அம் மூதாட்டியின் குடிலின் ஓலைத்தட்டி, இரவு, நேரகாலம் தெரியாமல் தட்டப்படும். அம்மூதாட்டியும் எமக்காக எந்நேரமும் எனக்குப்பிடித்த பழஞ்




லெப். கேர்ணல் நவம்

சோறும் சம்பலும் தயாரித்து வைத்திருப்பார்.

உண்டகளிப்பில் சிறிது உறங்குவோம். பின் அம்மூதாட்டி நாம் கூறியபடி சிலநிமிடங்களில் சக்கரையுடன் தேயிலைச் சாயத்தைக் கோப்பையில் கொண்டு எழுப்பிவிடுவார். பின்னர் மீண்டும் அடுத்தடுத்த இரவிலேயே அக்குடில் ஓலை இரகசியமாகத் தட்டப்படும். அதுவரை பச்சைத் தண்ணீரும் மூதாட்டி தரும் மரவள்ளிக் கிழங்குப் பொரியலும்தான் எமது உணவு. இதனால் எமது உடல் பலவீனமடைந்து எனக்கு காய்ச்சல் வரத்தொடங்கியது. முகாமில் எனக்கு மருத்துவம் செய்துவிட்டு எமது குழுவினர் சண்டைக்குத் தயாராகிக்கொண்டு இருந்தனர்.

நானும் எனது சக போராளிகள் இருவருமாக எமது பிரதான முகாமிற்குச் சென்று எமது தளபதி லெப். கேர்ணல் நவத்திடம் எமது வேவு பற்றியும், செய்யப்போகும் தாக்குதல் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னோம். அதற்கு நவம் மறுத்துவிட்டார். ஏனெனில் இத்தாக்குதல் தற்கொலைப்படைத் தாக்குதலுக்குச் சமனானது என்றும், இதில் சிறு பிழையும் அத்தாக்குதலில் பங்குபற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்கவிடாமல் கொன்றுவிடும் என்றும் எடுத்துரைத்தார். ஆனால், நானோ எனது குழுவினரோ விடாது அடம் பிடித்தோம் தண்ணீரூற்றில் நாம் பறிகொடுத்த சக்கைகளிற்கு பதிலடி கொடுப்போம் என்ற எமது குழுவினரின் பிடிவாதத்தால் நவம் இதற்குச் சம்மதித்தார். ஆனால் கடுமையான நிபந்தனையுடன். அவர் தானும் சண்டைக்கு வருவதுதான் என்றார். ஆனால் நாங்கள் எவரும் அனுமதிக்கமாட்டோம் என்று கூறி அவரை மறிப்பதற்குள் என்னுடன் வந்த சகபோராளிகள் இருவர் அழுதேவிட்டார்கள். நவமும் நாங்கள் கூறியதற்கு சம்மதித்து தான் தாக்குதல் நடத்தும் குழுவிற்கு உதவி தேவைப்படின் உதவி வழங்குவதற்காக 35 போராளிகளுடன் தயாரானார். நாங்களும் சம்மதித்தோம். ஏனெனில் இவர்கள் தங்கியிருக்கும் இடம் நாங்கள் தாக்கப்போகும் மினிமுகாமிற்கு 1/2 மைல் தொலைவில் என்பதால் சம்மதித்தோம்.



மேஜர் கிண்ணி

தமிழீழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மினி முகாம் ஒன்றை அழித்து வெற்றி கொண்ட நிகழ்வை 'நினைவில் சில நிகழ்வுகள்' என்ற தலையங்கத்தில் உயிரோட்டத்துடன் வெளிப்படுத்தியிருக்கிறார் மேஜர். கிண்ணி.

10. 07. 1992ல் இயக்கச்சியில், இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எமது குழுவிலிருந்து தாக்குதலிற்கு செல்லும் குழுவினரை தெரிவு செய்வது என்பது பெரும் கஷ்டமான காரியம் எனபது அப்போதுதான் எனக்கும் நவத்திற்கும் தெரிய வந்தது. அனைத்து போராளிகளுமே தாங்களும் வருகிறோம், தாங்களும் வருகிறோம் என்று என்னுடன் சண்டை பிடித்தனர். ஆனால் நவமோ சிலரைத் தெரிவு செய்துவிட்டு மீதிப்பேரை துண்டுகளில் பெயரை எழுதி குலுக்கல் முறை மூலம் 15 பேரை தெரிவு செய்தார். பின்னர் குலுக்கல் முறையிலேயே மீதம் 35 பேரையும் தெரிவு செய்தார். பின்னர் தாக்குதல் குழுவிற்கு தலைமை தாங்கும் என்னை தாக்குதல் விபரம்பற்றி போராளிகளுக்கு விளக்கமளிக்கும்படி கூறினார்.

நெடுங்கேணி பிரதான இந்திய முகாமிற்கு மிக அண்மையில் 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாடசாலையிலேயே இம் மினி முகாம் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை நடைபெறும் வேளைகளில் இவர்கள் தங்களுக்கென்று சில கட்டிடங்களை ஒதுக்கிவிட்டு மீதியிலேயே பாடசாலை நடாத்த அனுமதித்தனர். பாடசாலையின் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் இவர்களின் பாரிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மினிமுகாமிற்கு ஒரு புறம் குளமும் (வெளி) மறுபுறம் சந்தையும், மற்றோர் பக்கம் முல்லைத்தீவு-வவுனியா பிரதான வீதியும் மற்றப்பக்கம் சிறு வெளியும், முகாமிற்கு முன்பாக சிலோன் தியேட்டர் செல்லும் பிரதான பாதை பிரிந்து செல்வதுமான, நாங்கள் தாக்குவதற்கு மிகவும் கடினமான பிரதேசத்திலேயே இம் மினிமுகாம் அமைந்திருந்தது. இதில் 25 முதல் 28 இராணுவ வீரர்கள் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் சீக்கிய இராணுவ வீரர்களே. இவர்கள் இரவு 7 மணியளவில் நெடுங்கேணி பிரதான இராணுவ முகாமிற்கு சென்று விட்டு மறுநாள் அதிகாலை 5 மணியளவில் மீண்டும் மினிமுகாமிற்கு வந்து விடுவார்கள். இடையிலே உள்ள 10 மணித்தியால இடைவெளிக்குள் நாங்கள் பாடசாலை வகுப்பறை, அலுவலகம், ஆசிரியர்கள் ஒய்வு அறை என்பவற்றில் 5 பேர் 5 பேராக பிரிந்து மறைந்து இருக்கப் போவதாகவும், இராணுவத்தினர் முகாமிற்குள் வந்த பின்னர் வெளியில் நிற்கின்ற நவம் ஒரு போராளியை அனுப்பி மினிமுகாமை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டு திரும்பும்படி கட்டளை இடுவார். நாங்கள் அதுவரைக்குள் உள்ளே இராணுவத்திற்கு எந்த வித சந்தேகமும் வரவிடாமல் பதுங்கி இருப்போம் என்றும் வெளியில் இருந்து துப்பாக்கி தடு கேட்ட பின்னர் நாங்கள் உள்ளே இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்றும் கூறினேன். அனைவரும் அதற்குச் சம்மதித்தனர்.

நான் எனது குழுவினர் பதினைந்து பேரையும் 5 பேர் 5 பேராக மூன்று குழுக்களாக பிரித்து அவற்றிற்கு ஒவ்வொன்றிற்கும் குழுத் தலைவரை நியமித்துவிட்டு இராணுவ மினி முகாமிற்கு வேவுபார்க்கச் சென்றுவிட்டேன்.

மறுநாள் மாலை 10ம் நாள் சகல குழுக்களுடனும் நவம் நெடுங்கேணி பெரியகுளம் பகுதியில் என்னைச் சந்தித்து இன்று வெள்ளிக்கிழமை; நாளை சனிக்கிழமை; பாடசாலை நடைபெறாது. ஆகவே, இன்று இரவு மினிமுகாமிற்குள் தங்கிவிட்டு நாளை காலை தாக்குதலை மேற்கொள்ளும்படி எனக்கு கட்டளையிட்டு விட்டு அவர் தனக்குரியதும் தனது குழுவிற்குரியதும் இடங்களைப் பார்வையிடச் சென்றுவிட்டார். நான் மற்றைய குழுக்களை



அலை வந்து தலாட்டும் சிறுதீவு - நாளை
அதி லிரண்டு நாடுகள் இதுதீர்வு
வலை கொண்டு போகிறான் படகோடு -இவன்
வரலாறு காணுவான் திடமோடு
கடல் வேங்கை எழுந்திட்ட தமிழீழம் -இனிக்
கனவாகிப் போகாது ஒரு நாளும்
படகேறிப் பலநாடு வென்றவா - புலிப்
படையோடு ஒன்றாகி இன்று வா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஓர் இடத்தில் தங்கவைத்துவிட்டு நவத்துடன் சென்றுவிட்டேன்.

அன்று இரவு இராணுவத்தினர் சற்றுத் தாமதமாகவே பதினொன்றரை மணியளவிலேயே மினிமுகாமில் இருந்து பிரதான இராணுவ முகாமிற்கு சென்றனர். இதனால் எமது செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை. 12 மணியளவில் நாங்கள் பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவமுகாமிற்குள் எமது கால்த்தடங்கள் பதியாத முறையில் ஒவ்வொருத்தராக உட்சென்றோம்.

5 மணித்தியாலங்களே மீதமாக உள்ளதால் எமது வேலைகளை துரிதமாக செய்து முடித்தோம். எப்படியோ அதிகாலை 4.20 மணியளவில் எமது அனைத்து போராளிகளும் மறைவாக தங்கக்கூடிய இடங்களை தெரிவு செய்தோம். 4.30 மணிக்கு எல்லோரும் அவர் அவர்களுக்குரிய இடங்களில் மறைவாக நிறுத்தப்பட்டனர்.

அதிகாலை 5.15 மணியளவில் இந்திய சீக்கியச் சிப்பாய்கள் அவர்களது பாடசாலை மினிமுகாமிற்குள் பிரவேசித்தனர். வந்தவர்களில் ஒரு பிரிவினர் பாடசாலை கட்டடங்களை ஒருமுறை நோட்டம் விட்டு விட்டு சென்று தமக்குரிய காவல் அரண்களில் நிலை எடுத்தனர். இவர்களை மறைவிடங்களில் இருந்து பார்த்தபோது, நாங்கள் உருமறைத்து ஒளிந்து கொண்ட முறை சரியா என எமது போராளி ஒருவர் பார்வையிட வருகின்றார் என்று எங்கள் மனதிற்குள் நினைத்து மனதிற்குளேயே சிரித்துக்கொண்டோம். ஒளித்துக்கொண்டோம்.

சுற்றிநின்ற இந்தியச் சிப்பாய்களை நினைக்கும் போது, உள்ளே உள்ள விடுதலைப் புலிகளிற்கு வெளியில் இருந்து எந்த விதமான இடையூறும் வரவிடாமல் காவல் மிகக் கடுமையாக உள்ளதாக நினைத்து எங்களுக்குள்ளேயே சிரித்துக்கொண்டோம். எங்களுக்கும் இராணுவத்திற்கும் சில அடி தூரமே இருந்ததால் எம்மால் வெளிப்படையாக சிரிக்கமுடியவில்லை.

நாங்கள் 5 பேர் இருந்தது அதிபர் அறை. அதன் ஓர் பக்க யன்னலோரமாக ஓர் இராணுவ வீரன் காவலில் நிற்கின்றான். அவனது பின்பக்கத் தலை எமக்கு சில அடி தூரத்திலேயே தெரிந்தது. இவன் எமது அறையின் உடைந்த யன்னலில் சாய்ந்து இருந்ததால் இவனது தலைப்பா



தமிழீழக் காவல்துறையினர் பதுக்கல் மண்ணெண்ணையை கைப்பற்றி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கையின் ஒரு பகுதிக் குஞ்சம் எமது அறைக்கு உள்ளே தொங்கியது. இவன் சற்றும் எதிர்பாராததாலேயே உள்ளே நாங்கள் இருப்பதை அவதானிக்கமுடியவில்லை. என்றாலும் என்னுடன் இருந்த எல்லிற் என்பவனிடம் இவன் திரும்பினால் சுடும்படியும், எந்த நேரமும் துப்பாக்கி இவனைக் குறி பார்க்கட்டும் என்றும் சைகை மூலம் கட்டளை இட்டேன். கணேசையும் உதவிக்கு சுடும்படி ச்சைகைமூலம் கட்டளை இட்டேன்.

நான் அவ்வறையின் வாசலை உட்புறமாக பூட்டி அதன் மேல் சாய்ந்து இருந்தேன். கதவின் மறுபுறம் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கதிரைகளைப் போட்டு துப்பாக்கிகளை எமது கதவின் ஓரத்தில் சாத்திவிட்டு பீடி குடித்தபடி சம்பாசித்துக்கொண்டு இருந்தனர். அவர்களது பீடியின் புகை கதவு இடுக்கிற்குள்ளால் அறைக்குள்ளே வந்து எங்களுக்கு பெரும் சிரமத்தைக் கொடுத்தது. பீடிப் புகையினால் இருமி விடுவோமா என்ற பயம். இவர்கள் இருவரும் இடையிடையே உரத்த குரலில் ஹிந்தி சினிமாப் பாடல்களைப் பாடியபடி இருந்தனர். இடை இடையே றோட்டில் சென்ற பெண்களைக் கூப்பிட்டு பலவிதமான கேள்விகளும் ஹிந்தியில் கேட்டார்கள். இரண்டு மூன்று பெண்கள் அழுவது மிகவும் நன்றாகக் கேட்டது. ஏன் என்று எமக்கு இன்றுவரை விளங்கவில்லை.

எமக்கு 50 மீற்றரில் அடுத்த அறையில் தங்கேஸ் தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்தது ஆசிரியைகள் ஒப்வெடுக்கும் அறை. அதன் யன்னல் யாவும் மரத்தால் ஆனவை. அதனால் அவர்களுக்கு வெளியில் நடப்பவற்றைப் பார்க்கமுடியவில்லை. இவர்கள் 5 பேரின் அறை வாசலில் மினிமுகாம் அதிகாரிகளும், தொலை தொடர்புச்சாதன அதிகாரியும் ஓர் புளிய மரத்தின் கீழ் மேசைகளின் மேல் இருந்து பெரிதாக எதைப்பற்றியோ அலட்டிக்கொண்டிருந்தனர். இவர்களது மறுபுறம் யன்னலிற்கு பக்கத்திலேயே பாரிய காவல் அரண் ஒன்று இருந்தது. இதுவும் றோட்டின் ஓரம் என்பதால் அதில் இருந்த இந்தியச் சிப்பாய்கள் றோட்டில் செல்லும் இளம் பெண்களை தமக்கு அருகே கூப்பிட்டு நிற்கவிட்டு தங்களுக்குள் சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்தனர். இவர்களது அறை சற்



மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி சுபன், 25. 9. 1992 அன்று பூநகரி இராணுவ முகாம் தாக்குதலை முன்னின்று வழிநடத்தி அறுபதுக்கு மேற்பட்ட காவலரண்களை தாக்கி அழித்து, வீரமிகு வரலாற்றை எழுதிவிட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். அவருடன் இத்தாக்குதலில் ஆறு விடுதலைப்புலி வீரர்களும் மண்ணில் வீரவிதையானார்கள். இம் மாவீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள்.

தளபதி சுபன் அவர்கள் முத்தமிழ் விழா மலருக்கு வழங்கிய ஆசிச்செய்தி இது.

பரணி முழக்கங்கள்
பகைவர்
செவிப்பறைகளைக்
கிழிக்கட்டும்!

வீர வரலாறு விரைவாக எழுதப்பட்டு விடியலை நோக்கிய வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் தமிழீழ தேசம்வாழ் மக்கள் தமிழ் அன்னைக்கு எடுக்கும் பெரு விழாவானது இம்முறை தமிழீழ மண்ணில் பல பாகங்களிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. முத்தமிழ் விழாவினை தமிழீழ மக்கள் அனைத்துப்பிரதேசங்களிலும் சிறப்புடன் கொண்டாடவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் உறுதியான தீர்மானத்தின் செயல் வடிவமாக வரலாற்றுப் புகழ் படைத்த மன்னார் மண்ணிலும் தமிழ் அன்னைக்கு பெருவிழா எடுக்கப்படுவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

எதிரிகள் எம்மைக் கண்டு அஞ்சுவது எமது கரங்களில் இறுகிக் கனலும் ஆயுதங்களைக் கண்டு அல்ல. துன்பங்களையும், துயரங்களையும், அடக்குமுறையின் சோதனைகளையும், வேதனைகளையும், அவலங்களையும் துச்சமாக மதித்து தடைகளை வெற்றியின் படிக்கற்களாக அடுக்கி வீர சுதந்திரப் போரில் வைரித்த மன உறுதியுடன் நிமிர்ந்து நிற்பதைக் கண்டுதான் என்ற உண்மையினை முத்தமிழுக்கு விழா எடுக்கும் இத்தருணத்தில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வடதமிழீழத்தில் மன்னார் முதலாக அனைத்துப் பிரதேசங்களிலும் விமரிசையாக நடைபெறும் முத்தமிழ் விழாவானது எதிர்காலத்தில் தென்தமிழீழத்தின் புலிபாய்ந்த கல்லிலும் நடைபெறும் காலத்தை வென்றெடுக்க வேண்டும். முத்தமிழ் விழாவின் அனைத்து நிகழ்வுகளும் வெற்றிபெற வேண்டுமென எனது இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றுப் பெரிதாக இருந்ததால் இவர்கள் ஆளுக்கொரு மூலையில் ஒய்வெடுத்துக்கொண்டிருந்தனர்.

அடுத்த அறையில் (சற்று பின்பக்கமாக முகாமின் மத்தியில் உள்ள அறை) காந்தனும் 4 பேரும் தங்கியிருந்தனர். இவ் அறைக்குள் இருந்த 5 பேரும் முக்கிய பங்கு உள்ளவர்கள். ஏனெனில் இவர்கள் முகாமின் மத்தியில் உள்ளதால் இவர்களுக்கு இரண்டு, LMG பொருத்திய பாரிய காவலரண்களைக் கண்காணிக்கும் பொறுப்பு உள்ளது. இவர்களது அறையின் முன்னால் உள்ள தேமா மரத்தடியில் 5,6 இந்தியச் சிப்பாய்கள் உரையாடியபடி இருந்தார்கள். இந்த அறையின் யன்னலைத் திறந்தால் முக்கியமான LMG பொருத்திய காவலரணின் முதுகுப்புறம் மிகக் கிட்டவாக 30 மீட்டரில் தெரியும். இந்த யன்னலிற்குள் இருந்து சுட்டால் LMG காவலரணை இலகுவாக செயலிழக்கச் செய்து விடலாம். இவர்களின் அறையின் மற்றைய யன்னலினூடு பார்த்தால் தங்கேஸ் தங்கியுள்ள அறையும் அதன் அருகில் உள்ள சில காவல் அரண்களும் தெளிவாகத் தெரியும். ஆகவே இவர்கள் சமயத்திற்கு தங்கேஸிற்கும் உதவி வழங்கலாம். ஆகவே இவ்வறையில் உள்ளவர்களுக்கே முக்கிய பங்கு இருந்தது.

எனக்கும் நவத்திற்கும் வோக்கித் தொடர்பு நிறுத்தப்பட்டு 45 நிமிடங்கள் கழிந்துவிட்டன. வெளியிலிருந்து எந்தவித துப்பாக்கிச் சூடுகளும் கேட்காததனால் எமது மனதில் பல்வேறு யோசனைகள் புகுந்துவிட்டன. எல்விற்றன், ஜெகன், கணேஸ், சுதன் ஆகியோரே என்னுடன் அறையில் இருந்தார்கள். இவர்கள் யாவரும் இராணுவ முகாமிற்குள் வந்து 1 1/2 மணித்தியாலங்கள் ஆகின்றது. இப்படியே இருந்தால், தற்செயலாக இராணுவத்தினர் எம்மவர்களை முகாமிற்குள் கண்டுவிட்டால் முடிவு வேறுவிதமாக மாறிவிடும் என்று சைகைமூலம் விபரித்தனர். எனக்கும் உண்மை விளங்கியிருந்தாலும் இன்னும் ஒரு மணித்தியாலம் பொறுமையாக இருந்து பார்ப்போம், அதன் பின்னரும் வெளியில் இருந்து தடுவராவிட்டால் நாமே உள் இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்று அவர்களைச் சமாதானம் செய்து தடுத்தேன். பின் மினிமுகாமிற்கும் நவத்திற்கும் இடையில் ஏதாவது பிரச்சனையோ, அதனால்தான் நவத்தினுடைய குழுவினர் மினிமுகாமிற்கு வெளியிலிருந்து துப்பாக்கியினால் சுடவில்லை என எங்களிற்குள் முடிவெடுத்தோம்.

தங்கேசினுடைய குழுவினரும், காந்தனுடைய குழுவினரும் இதே மனநிலையிலேயே தனித்தனியே இருந்து யோசனை செய்தனர். எங்கள் மூன்று குழுவினரிற்கும் எந்தவிதமான தொடர்புகளும் அற்ற நிலையில் மற்றைய இரு குழுவினரும் எனது ஆரம்ப சூட்டிற்காகக் காத்திருந்தனர்.

# இனியொரு விதி

- குறும்பட விமர்சனம் -

## "தமிழரின் வாழ்வியல் துயரத்தின் ஒரு குறியீடு"

ஏ.ஜே. கனகரட்னா

திரைப்படம் என்பது அடிப்படையில் கட்புலன் சார்ந்த ஊடகம் என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்றே. இப்படத்தின் நெறியாளர் இந்த உண்மையை நன்குணர்ந்து உள்வாங்கி, திரைப்படத்திற்கே உரிய "கட்புல மொழியை" மிக நேர்த்தியாகக் கையாள்கிறார். தேவைப்படும் கட்டங்களில் மட்டுமே இயல்பான, பேச்சுமொழிப்பாங்கில் அமைந்த உரையாடல்கள் வருகின்றன. ஒலிகள் எழுகின்றன.

வெவ்வேறு ஊடகங்களைச் சார்ந்த உருவங்களை ஒப்பிடுவதில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அவ்வாறு ஒப்பிடும் போது ஊடகத்தைக் கடந்த சில ஒற்றுமைகள் புலப்படத்தான் செய்யும். இத்தகைய ஓர் குறும்படத்தைச் சிறிய உணர்ச்சிப்பாடலுக்கு (Short Lyric) ஒப்பிடலாம். முன்னையது கட்புல மொழியைச் சார்ந்ததும், பின்னையது செவிப்புல மொழியைச் சார்ந்தும் இருப்பினும், இரண்டு வடிவங்களிலும் ஓர் இறுக்கத்தை, உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவதில் ஓர் கச்சிதத்தைக் காணலாம். நல்லதொரு உணர்ச்சிப் பாடலை வாசிக்கும் போது ஏற்படும் தாக்கங்களை, இக்குறும்படம் என்மனதில் ஏற்படுத்துகிறது. தமிழ் மக்களின், குறிப்பாக திருமலை, மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் துயரத்தின் ஒரு (Existentional Anguish) குறியீடாக இப்படம் விளங்குகிறது.



ஓர் கலைப்படைப்பிற்கும் வாசகன் அல்லது பார்வையாளருக்குமிடையே நிகழும் இடைவினை (Interaction) ஓர் வகை உரையாடல் மூலமே கலைப்படைப்பு உண்மையில் நிறைவுபெறு

www.tamileelamarchive.com

நானோ அல்லது தங்கேசோ அல்லது காந்தனோ முதலில் சூட்டினை ஆரம்பித்தால் ஏதாவது ஒரு அறைக்குள் இருக்கும் குழுவினர் அறைக்கு வெளியே வரமுடியாமல் இராணுவத்தினர் எம்மை மடக்கிவிடுவார்கள். வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு வந்தால் இராணுவத்தினரின் கவனம் எல்லாம் வெளிப்புறத்திலேயே இருக்கும். நாம் அனைவரும் யாருக்கும் தெரியாமல் அறையைவிட்டு வெளியேறி வெளிப்புறமாக நிலை எடுத்திருக்கும் இராணுவத்தினரின் முதுகுப்புறம் நின்று சுலபமாகச் சுட்டுவிடலாம் என்பதே எமது தாக்குதல் திட்டமாகும். ஆனால் உள்ளேயிருந்து நாமே சூட்டினை ஆரம்பித்தால் எமக்கு அருகில் உள்ள இராணுவத்தினர் உட்புறமாக நிலை எடுத்து எமது அறைகளின் வாசல்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். அப்படிச் செய்தால் அறையில் இருந்து வெளியே பாய ஒவ்வொருவராக சுட்டுவீழ்த்திவிடுவார்கள். ஆரம்பச்சூடு சுடுபவர்கள் மட்டுமே எந்த இழப்புக்களும் இன்றி வெளிவந்து தாக்கலாம். அவர்களையும் கூட சில நிமிடங்களில் இராணுவத்தினர் தமது நிலைகளில் இருந்து சுட்டுவீழ்த்தி விடும் நிலை. ஆகவே கூடுதலான வரையில் இழப்புக்களை குறைப்பதற்காக நாங்கள் 7.30 மணிவரைக்கும் பொறுத்திருப்போம் என்றும் அதற்கிடையில் இராணுவத்தினர் எம்மைக் கண்டால் மாத்திரமே தாக்குதலை ஆரம்பிப்பது என்று எனது குழுவிற்கு சைகை மூலம் விபரித்தேன்.

உள்ளே இருக்கும் போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு நாளாகக் கழிந்துகொண்டிருந்தது. அடிக்கடி எனது மனதில் நவம் கூறிய வார்த்தைகள் நினைவில் வந்து உறுத்தியது. "இதில் விடும் சிறு பிழையும் தாக்குதலில் பங்கு பற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்காமலே கொன்றுவிடும்." என்று சொன்னது உண்மைதானா என்று எனது மனம் அடித்துக்கொண்டது. எங்கோ சிறுபிழை நடந்துவிட்டது என்பது மாத்திரம் தெளிவானது.

இந்த இடை நேரத்தில், எங்கள் மனங்களில் எங்கள் தோளோடுதோள் நின்று போராடி மரணித்துக்கொண்ட சகபோராளிகளினது நினைவுகளே மேலோங்கி நின்றது. இந்த இக்கட்டான நேரத்திலும் ஒவ்வோர் அறையிலும் ஒவ்வொருவரும் மற்றவரை சைகை மூலம் கேலி செய்து மனதிலும் முகத்திலும் மகிழ்ச்சி நிரம்பவே காணப்பட்டனர்.

(மிகுதி அடுத்த இதழில்...)

கின்றது. இவ்வாறுநோக்குகையில், குறும்படத்தின் காட்சிப் பரப்பெல்லையும், நிகழ்வெல்லையும் முழுநீளப்படத்தின் காட்சிப் பரப்பெல்லையையும், நிகழ்வெல்லையையும் விட குறுகியிருக்கும் போதிலும் குறும்படத்தின் படிமங்களைக்கொண்டு பார்வையாளன் தனது மனதிரையில் அவற்றினைப் பூரணப்படுத்துகிறான். மிகவிரிவான கூறுகளும் அமைந்த விவர



ண்படம் போல் குறும்படம் அமைந்திருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது உண்மையில் எமது பார்வையாளரின், சுவைஞரின் கற்பனைவளத்தை இகழ்வதாகவே யிருக்கும்.

எடுத்துக்கொண்ட பொருளை புறச்சூழலின் தாக்கம் எவ்வாறு ஓர் இளைஞனைப் பாதித்தது, அத்தாக்கத்தால் உந்தப்பட்ட அவன் ஆயுதப்போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கிறான், என்பதை இக்குறும்படம் மிக எளிமையாகவும், முனைப்பாகவும் கையாள்கின்றது. முஷ்டிகள் உயர்த்தப்படவில்லை, கோசங்கள் கர்ஜிக்கப்படவில்லை, வீரவசனங்கள் முழங்கவில்லை, பச்சைப் பிரச்சாரத்தின் வாடை எதுவும் வீசவில்லை. ஊடகமே செய்தி (the medium is the message) என்பதை நெறியாளன் உணர்ந்திருப்பதால், இந்தக் கோளாறுகள் எதுவும் நிகழவில்லை.

தனித்துவம் வாய்ந்த தமிழ்த் திரைப்படப் பாரம்பரியம் ஒன்றை ஈழத்திலேதான் உருவாக்கிக் கட்டியெழுப்பலாம் என்று எம்மை எண்ணத்தூண்டுகிறது. "இனியொரு விதி" இன்றைய யதார்த்தத்தில், குறிப்பாக அரசியல் நிலைமையில் எமது கலைஞர்கள் வேரூன்றியிருந்தால், படாடோப உத்திகள் எதுவுமின்றியே அவர்களது படைப்புக்கள் கலாரீதியாக வெற்றியீட்டும். பாரதியார் கூறியது போல் "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்". வாக்கினில் மட்டுமல்ல திரைப்படக்கருவியிலும் தான்.

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். வெறும் முகப் புகழ்ச்சிக்காகவல்ல, வெளிநாடுகளில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு இக்குறும்படம் அனுப்பப்படவேண்டும். அதற்கு வேண்டிய தரத்தினை "இனியொரு விதி" எய்தியுள்ளதாக நான் கருதுகிறேன். பரிசுகளைப் பெறத் தவறினாலும், வெளியுலகு செவ்வனே அறியாதிருக்கும் நமது யதார்த்தத்தினை கலாரீதியாக உலகிற்கு அது உணர்த்தும். அத்துடன் கலைப்படைப்பு என்ற வகையில், இனியொரு விதி தனி ஈழ முத்திரையைப் பதிக்கும் என்பதே என் கணிப்பீடு.

தன்னடக்கமே இக்குறும்படத்தின் பலம். இத்தன்னடக்கம் பெரும்பாலான தமிழ் வணிகத் திரைப்படங்களுக்கு அன்னியமானதே.

www.tamileelamarchive.com




# தமிழ்நாட்டில் தேசிய எழுச்சி!

சங்கர்

தமிழ் நாட்டில் மாபெரும் தேசிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதை அண்மைக்காலச் சம்பவங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. புரட்டாதி மாத ஆரம்பத்தில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் வாழ்வுரிமை மகாநாடும், அதன் பின்னர் நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலமும் இவ்வெழுச்சிக்கு சாட்சியமாய் அமைகின்றன. மகாநாட்டில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வாழ்த்தியும், தலைவர் பிரபாகரனை உலகத் தமிழரின் தலைவனாகப் போற்றியும் பலர் உரை நிகழ்த்தியுள்ளனர். ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமாகக் கூறப்படும் தனு எனும் பெண்ணை, மதுரையை எரித்த கண்ணகிக்கு ஒப்பிட்டும், தன்மானமுள்ள ஆதர்ஷ வீர நங்கையாக வர்ணித்தும் பேசியிருந்தனர். இம்மகாநாட்டில், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, இந்திய அரசியல் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜனதா தள தலைவரான V.P. சிங் இதில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அடுத்ததாக நடந்த மாபெரும் ஊர்வலத்தில், 2 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். தமிழீழ விடுதலையையும், பிரபாகரனையும் வாழ்த்தும் கோஷங்கள் இடைவிடாது ஒலித்தன. பிரபாகரனது பெரிய அளவிலான புகைப்படங்களும், தமிழ் நாட்டு மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் பதாகைகளும், சுலோக அட்டைகளும் பரவலாகக் காணப்பட்டன. புலி ஆட்டமும் ஊர்வலத்தில் இடம் பெற்றது. விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மத்திய அரசும் மாநில ஜெயலலிதா அரசும் கடுமையாக அறிவித்திருந்த போதும், மக்கள் பெருமளவில் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தடாச் சட்டம், மக்களது உணர்வு வெள்ளத்தை தடை செய்ய முடியவில்லை.

இதனைத் தொடர்ந்து தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ், தமிழ் நாட்டு பொதுவுடமைக் கட்சித் தலைவர் திரு. மணியரசன், திலீபன் மன்றத் தலைவர் தியாகு ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் கைதைத் தொடர்ந்து பெரும் கலவரம் வெடித்தது. தமிழ் நாடே ஸ்தம்பித நிலையை அடைந்தது போல் காணப்பட்டது. பஸ்கள் தீவைத்து எரிக்கப்பட்டன. ஒரு பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார். 4000 பேர் வரை கைது செய்யப்பட்டனர். திரு. ராமதாஸ் போன்றோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதால், கலவரம் ஓரளவு தணிந்து போனது. இது குறித்து கருத்து வெளியிட்ட திரு கருணாநிதி "இந்திய அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோருவதில் என்ன தவறு இருக்கிறது?" எனக் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு திரு. கருணாநிதி விட்டுக் கொடுக்காமல் ஏதும் சொல்ல வேண்டிய நிலை தமிழ் நாட்டில் தோன்றிவருகின்றது. ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு கொடுத்துவந்த ஆதரவை தனது கட்சி நிறுத்திவிட்டதாக திரு. கருணாநிதி கூறியதைக் காட்டிக் கொடுப்பு என ராமதாஸ் கண்டித்தார். நீதி மன்றத்திற்கு முன்னதாக திரு. கருணாநிதியே ஒரு பக்கமாகத் தீர்ப்பு வழங்கிவிட்டதாக ஆய்வாளர்களால் கூறப்பட்டது. மேலும், பெரியாரின் கொள்கைகளையும், திராவிட இயக்கச் செயல்பாடுகளையும் பாட்டாளி



வி. பி. சிங், பாஸ்வானுடன் ராமதாஸ்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்.


மக்கள் கட்சி எடுத்துச் செல்வதானது, பாரம்பரிய திராவிடக்கட்சிகளான திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் செல்வாக்கினை மக்கள் மத்தியில் குறைந்து வருகின்றது. தமிழ் நாட்டில் தி. மு. க விற்கு இருந்த மக்கள் ஆதரவை பாட்டாளி மக்கள் கட்சி பறித்து வருவதாக கருத்து நிலவுகிறது. தமிழ் நாடு சட்டசபை ஆட்சியதிகாரத் திற்காக, 60ம் ஆண்டுகளில் தனித்தமிழ் நாடு கோரிக்கை கைவிடப்பட்டதில், காலகதியில் எவ்வித பிரயோசனமும் இல்லாது போய்விடுமோ என் தி. மு. க, அ.-தி. மு. க ஆகிய "தேர்தல் களக்" கட்சிகள் பயப்படுகின்றன.

தமிழ்நாட்டு தேசிய இயக்கம் என்பது இயற்கையானது. வரலாற்றின் இயக்கப் போக்கோடு இயைபுடையது. தமிழ் மக்களின் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையைக் குறித்து நிற்பது. இவ்வியக்கத்தின் எழுச்சி, தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட முனைப்பினால் கூர்மை பெறுவது தவிர்க்கமுடியாததாக உள்ளது. விடுதலைப் புலிகளிடம் தோல்விகண்டு, இந்திய இராணும் பின்வாங்கியதானது, இந்திய இராணுவத்தின் "வெற்றித் தன்மை" குறித்த மாயையும் தகர்த்துள்ளது. மேலும், இந்தியத் தேசியவாதம் என்பது அடக்குமுறையாளர்களின், ஆளும் வர்க்கத்தின் கற்பனை என்ற கருத்தும் இடதுசாரிப் புரட்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. பிராமணிய மேலாதிக்கம் குறித்த திராவிட இயக்கங்களின் எதிர்ப்பும் புரட்சிகர இயக்கங்களின் மேல் தட்டு வர்க்க எதிர்ப்பும் சங்கமமாகும் தன்மை இங்கு ஏற்படுவதை காணக்கூடியதாவுள்ளது. தமிழ் தேசியவாதம் என்ற முனையிலேயே இச்சங்கமம் நிகழ்வதை அவதானிக்கலாம். தேசிய எழுச்சியானது, பெரும்பான்மையான சாதாரண சனங்களை விடுவிக்கும் ஜனநாயகப் புரட்சியாக இங்கு நோக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

பாட்டாளி மக்கள்கட்சி ஊர்வலத்தின்போது



தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான எழுச்சி எங்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. இந்திய அரசியல் சட்டம் மாற்றப்பட்டு, இவ்வுரிமை நிறுவப்பட வேண்டும் என்ற பா. ம. க மகா நாட்டுத் தீர்மனத்தை நாம் உற்று நோக்கினால், தமிழ் மக்களின் பரந்த நோக்கம் நன்கு புலப்படும். இந்தியா ஒரு தேசமல்ல; பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். அங்குள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்ட நிலையில் ஏற்படும் ஒற்றுமையிலேயே -இந்திய உப கண்டத்தின் பலமும் -வளர்ச்சியும் -தங்கியுள்ளது. இத்தகு உறுதியே 3ம் உலக நாடுகளுக்கு வழிகாட்டும்.



**இந்த புகைப் படத்திலுள்ள எமது தேசத்தின் வயோதிபத் தாத்தாவைப் பார்க்கும் உங்கள் உள்ளங்களில் உரசும் உணர்வுகளை எவ் இலக்கிய வடிவிலாயினும் எமக்கு ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் 30. 10. 92க்கு முன்னர் எழுதி அனுப்பி வையுங்கள். சிறந்தவை எனக் காணப்படுபவை எமது ஆசிரியர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு எரிமலையில் பிரசுரிக்கப்படும்.**

**- ஆசிரியர் குழு -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## வாசகர் கடிதப் பகுதி

### எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

எரிமலையை தவறாது வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. எமது தாய் மண்ணைக் காப்பாற்றும் சகோதர சகோதரிகளின் உணர்வுகளை எரிமலையில் கதைகளாக, கவிதைகளாக படிக்கின்றபோது, அவை எம்மண்ணை நினைக்கத் தூண்டுவதுடன், எம்மையும் எமது தாய் மண்ணுக்கு அழைத்துச் செல்கின்றது. எரிமலை மேலும் பல அம்சங்களுடன் சிறப்பாக வெளிவர வாழ்த்துகிறேன்.

N. பாமா
பாரிஸ்.




### அன்புடன் ஆசிரியருக்கு!

புரட்டாதி மாத எரிமலை கிடைக்கப் பெற்றது. ஐரோப்பாவிலிருந்து பல வித பத்திரிகைகள், சஞ்சிகைகள் நடுவே; தாய் மண்ணின் உயிர்துடிப்பின் வெளிப்பாடாக, தமிழீழ மக்களின் விடிவையே இலட்சியமாகக் கொண்டு இதழுக்கு இதழ் தரத்தில், அமைப்பில் உயர்ந்து வருவதைக் காணும்போது ம்கிழ்ச்சியாக உள்ளது.

க. அரியநாயகம்
ஜேர்மனி.

### அன்பான ஆசிரியர் குழுவினருக்கு!

எரிமலை பார்த்தேன்; படித்தேன். தாயகப் போராட்டத் தணலை நறுமண தமிழ்ச்சுவையுடன் தருவதை உணர்ந்தேன். கலை உணர்வையும் -கலாச்சார உரமூட்டலையும் வெளியிடுதலை தனியொரு மனிதன் நான் பாராட்டுதல் போதா தாயகம் நேசிக்கும் தமிழர் அனைவரும் பாராட்டும் வழிவகையினை வணக்கத்துடன் வேண்டுகிறேன்.

தாழ்மையுடன்,
துரை சிவபாலன் (காந்தி)
இத்தாலி.

### அன்பின் எரிமலைத் தோழர்களே!

தமிழீழ போராட்ட வடிவங்களை பல்வேறு கோணங்களில் 'எரிமலை', வாசகர் முன் வைக்கிறது. அனைத்து அம்சங்களும் மிக அருமை. தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

சிறி
ஜேர்மனி

### அன்பின் எரிமலை ஆசிரியருக்கு!

நான் இங்கு வந்து இரு மாதங்கள். எரிமலை இதழைக் கண்டேன். தமிழீழத்தில் நின்றது போன்ற உணர்வு கொண்டேன். எரிமலையே நீ என் கையில் மாதந்தோறும் வெகுவிரைவில் கிடைக்க வேண்டுகின்றேன்.

கச்சாயூர், பே. கமலரூபி. பேர்லின்.

### எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

பொய்களைச் சுட்டெரித்து உண்மைகளையும், தமிழீழத்தின் உண்மையான நிலைகளையும் விடுதலைப் புலிகளின் சாதனைகளையும் துல்லியமாக படம் பிடித்துக் காட்டும் எரிமலையே, நீர் இன்னும் புதுப் பொலிவும் புகழும் பெற எனது வாழ்த்துக்கள்.

எரிமலையே பொய்களை சுட்டெரி -
ஏறிடும் தமிழீழத்தில் ஓர் புலிக் கொடி.

- சண் -
ஜேர்மனி.

### எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

இனி அடுத்த எரிமலையை எப்போ படிப்பேன் என ஆர்வத்துடன் இருக்கிறேன். எரிமலையை வாசிப்பதால் மனம் திருப்தி அடைகிறேன். தொடர்ந்து வளர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சுமதி.
ஜேர்மனி.

### எரிமலை ஆசிரியருக்கு!

தங்களது புரட்டாதி மாத எரிமலை பத்திரிகையில் குறுக்கெழுத்துப் போட்டி என்ற விடயம் சேர்த்துக்கொள்ளப் பட்டதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள தமிழீழ மகள்
அ. அனுஜனா

### எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

குறுக்கெழுத்துப் போட்டி வரவேற்கக்கூடிய ஒரு காரியம். ஏனென்றால் நம்மவர் எல்லோரும் புத்தகம் படிப்பதுண்டு. ஆனால் அக்கறையில்லாமல் படிப்பதுமுண்டு. குறுக்கெழுத்துப் போட்டி வைப்பதால் வினாவுக்கு விடை எழுதும் போது ஆணித்தரமாக மனதில் பதிகின்றது. இதை விடாது தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்பின் சகோதரன்
கருணா.

### மதிப்புக்குரிய ஆசிரியருக்கு!

வந்தனங்கள் பல. சென்ற மாத எரிமலை இதழில் வெளிவந்துள்ள குறுக்கெழுத்துப் போட்டி எம் போராட்ட நிகழ்வுகளை மக்கள் முன் படைப்பதாக உள்ளது. பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

இரா. அன்பரசி
ஜேர்மனி.

### எரிமலை தரும் அருமைச் சகோதரர்க்கு,

'எரிமலை' கண்டு பெருமிதம் கொள்ளும் சிறியதோர் நெஞ்சின் பணிவுகொள் வணக்கம்.

எமது தாய்மண்ணில் மிகவும் நெருக்கடியான, இக்கட்டான ஒரு சூழலில் இருந்து வெளியாகும் எமது மக்களின் படைப்புக்களின் தரம்.. மிக மிக உயர்ந்ததாகவும் உன்னதமாகவும் இருப்பதை நாம் அவதானிக்கத் தவறக்கூடாது.

பங்கயமணாளன் எழுதிய கடிதத்திலிருந்து.
பெரிய பிரித்தானியா.

*அன்புடன் எரிமலை வாசகர்கட்கு!*

*நீங்கள் காட்டி வரும் அக்கறையையும் பேராதரவையும் எமக்குக் கிடைக்கும் கடிதங்களே சொல்லி நிற்கின்றன. மேலும் குறுக்கெழுத்துப் போட்டியில் அதிக எண்ணிக்கையிலான வாசகர்கள் சரியான விடைகளை அனுப்பியிருந்தனர். அதில் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எரிமலையின் வளர்ச்சியில் சகல வழிகளிலும் அக்கறை கொண்டு நிற்கும் அனைத்து வாசக உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*


*ஆசிரியர் குழு*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# குறுக்கெழுத்துப் போட்டி இல. 2

இங்கே வெட்டவும்



பெயர்:

முகவரி:

### மேலிருந்து கீழ்

1. சுதந்திர தமிழீழத்துக்காக முதல் வீரமரணத் தைத் தழுவிக்கொண்ட விடுதலைப் புலி வீரன் யார்?
2. தமிழீழத்தின் எந்தப் பகுதியில் இலங்கை இராணுவத்தால் "ஒப்பரேஷன் லிபரேஷன்" என்னும் பெயரில் தாக்குதல் நடாத்தப்பட் டது. ?
3. கரும்புலிகளில் முதல் மாவீரர்?
5. தமிழீழக் கவிஞர்களில் இவரும் ஒருவர்?
6. தமிழீழத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் இதுவும் ஒன்று.
9. அழகு மிகுந்த தமிழீழத்தில் ஓர் இயற்கைத் துறைமுகம்.
11. செக்கோஸ்லாவாக்கியா என்ற நாட்டிலிருந்து சுதந்திரக் குடியரசாகப் பிரிந்த நாடு?
12. அழிபடுவோம் ஆனால்..........? (கீழிருந்து மேல்)

### இடமிருந்து வலம்

1. செக்கோஸ்லாவாக்கியா எந்த ஆட்சிமுறை யைக் கொண்ட நாடு?
4. கார்த்திகை 27 ம் திகதி.....
7. தமிழீழத்தில் தரைப்படைக்கு அடுத்ததாக வளர்ந்து வருவது....
8. அவரின் 16 வது நினைவு தினம் அண்மையில் தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது?
10. பண்பாட்டு இசைக்கருவிகளில் முக்கிய இடம் பெறும் கருவி? (வலமிருந்து இடம்)
13. கொடுப்பவர்கள் இருக்குமட்டும் வாங்குபவர் கள் இருப்பார்கள் எதை?

### நிபந்தனைகள்:

1. விடைகள் வந்துசேரவேண்டிய கடைசித் திகதி 25. 10. 1992.
2. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

### குறிப்பு:

இப்போட்டியில் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி வெற்றிபெறும் முதல் மூவருக்கு எமது எரிமலை இதழ், முறையே ஒரு வருடத்திற்கு, ஆறு மாதங்களுக்கு, மூன்று மாதங் களுக்கு பரிசாக அனுப்பிவைக்கப்ப டும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 1 விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பூ | | | | | | கா | | | |
| ப | | ம் | | | | க் | | து | |
| தி | உ | த | ய | தா | ர | கை | ஜே | ம் | ஸ் |
| க | | நா | | ய | | வ | | பு | க |
| ண | | ழ | | க | | ன் | | | ள |
| ப | | ஈ | | ம் | | னி | | | த் |
| தி | லீ | ப | ன் | ன | | ய | அ | க | தி |
| ப் | | | மா | ச | | ன் | | | ல் |
| பி | | | ட | ரி | | | | | |
| ள் | | | ண் | த | | செ | ஞ் | சோ | லை |
| ளை | | | தொ | | | | | | |

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




சிந்து முத்திரையில் உள்ளது போன்ற புனிதக் காளை

தைத் தொழிலாகக் கொண்டு அமைதியானதொரு வாழ்வை மேற்கொண்டிருந்த திராவிட மக்கள் கடவுளை வணங்க காரணம் பலவாக இருக்கலாம். தன்னுடைய அறிவுக்கு எட்டாத விடயங்கள் யாவும் கடவுள் அல்லது இயற்கை என எண்ணுவது மனித மனம். அதை இன்னும் எவ்வளவு முன்னேற்றம் கொண்ட இனத்திலும், நாட்டிலும் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் திராவிட இன மக்களும் விதிவிலக்கல்ல. இந்த அண்டத்தின் (Galaxy) ஒவ்வொரு அசைவையும் அறிந்து அதனைக் கட்டுப்படுத்தும் சக்தியை என்று மனிதன் அடைகின்றானோ அன்றே கடவுள் நம்பிக்கை அற்றுப்போகும். அதற்காக அறியாமை கொண்டுள்ள ஓரினத்தில் கடவுள் பெயரால் மேலும் மேலும் அறியாமை என்ற பலவீனத்தை மிகைப்படுத்துதல் மனித சமூகத்திற்கே இழைக்கப்படும் அநீதியாகும். அறியாமை மேலும் தீவிரப்படுத்துவதற்காக ஒரு தலைமை உண்டென்றால் அதைத் தகர்த்து எறிய வேண்டியது பகுத்தறிவு கொண்ட அரசியல்தலைமைகளால் மட்டுமே முடியக்கூடியதாகும். கடவுளைப் பற்றிய கருத்துக்கள் எந்த அரசு கோலோச்சும் போதும் இருந்து கொண்டேதான் இருக்கும். கோலோச்சும் அரசானது அறியாமைக்கு துணைபோதலும் அல்லது அதற்கு தலைமை தாங்குவதும் அந்த இனத்திற்கு இழைக்கப்படும் அநீதியே! அந்நிகழ்வுகள் அந்த இன மக்களின் வரலாற்றில் ஏற்பட்ட கறைகளே!

## உலகின் முதல் கலைஞன் யார்?

சமுதாயத்தில் முற்போக்கான எண்ணங்கொண்ட கலைஞர்கள் தங்கள்செயற்பாடுகள் மூலம் அல்லது கலைப்படைப்புக்கள் மூலமாக தங்கள் சிந்தனைகளை கலைவடிவில் வெளியிட என்றுமே அஞ்சியதில்லை. அவ்வாறு அவர்கள் படைப்பில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் அவர்களுக்கு "பைத்தியக்காரர்கள்" என்ற பட்டம் தொடர்ந்தும் சூட்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தான் பிறந்த சமுதாயத்திலேயே கொடுக்கப்படும் இந்த பட்டங்களுக்கு அவர்கள் அச்சம் கொள்வதில்லை. அதனை பொருட்படுத்துவதுமில்லை.

நிர்வாணமாக அலைந்து திரிந்த காட்டு மிராண்டிக் கூட்டத்தின் மத்தியில் ஒருவன் தன் உறுப்புக்களை மறைக்க இலைகளைக் கோர்த்து ஆடையாக்கி அணிந்த போது அவனைச் சுற்றியுள்ள கூட்டம் அவனுக்குக் கொடுத்தப்பட்டமும் "பைத்தியக்காரன்"தான். ஆனால் காலம் அவனை நாகரிக மனிதனின் முன்னோடியாக ஆக்கிவிட்டது. இது வரலாற்று உண்மை. நிர்வாண நிலையில் திரிந்த காட்டு மிராண்டிக் கூட்டத்தில் முதலில் இலைகளால் உடையணிந்தவன்தான் முதல் சிந்தனையாளன், முதல் புரட்சியாளன், முதல் கலைஞனும் அவனே! அவனுக்கு அன்று ஏற்பட்ட தாக்குதல்களும் விமர்சனங்களும்தான் மேலும் மேலும் உரமளித்து இலைகளால் தயாரிக்கப்பட்ட உடைகளில் இருந்து ஒரு படி மேலே சென்று மரப்பட்டை, விலங்குகளின் தோல், பருத்தி, பட்டு என்று படிப்படியாக இன்று செயற்கைப் பட்டு என்று மேலும் மேலும் தொடர்ந்து கொண்டே



"சுதந்திரத்தையும் விடுதலையையும் விட அரிய பொருள் வேறொன்றும் கிடையாது. நமது நாட்டையிழந்து மீண்டும் அடிமைப்படுவதை விட அனைத்தையும் தியாகம் செய்வோம்."

"மக்களுடைய நலன்களுக்காக பாடுபடுவதைவிட அழகு மிக்கதும், அற்புதமானதுமான எதுவும் சமுதாயத்தில் கிடையாது.

நன்றி - ஹோ. சி. மின்
வியட்நாமின் விடிவெள்ளி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





இக்கட்டுரை, ஆவணி 1992 எரிமலையில் பிரசுரமான "காலத்தை வென்ற கலைகள்" கட்டுரையின் தொடர்ச்சியாகும்.

வேலு

### கடவுளை வணங்கினார்களா?

சிந்துவெளி மக்கள் சிவ வழிபாட்டைக் கொண்டிருந்தார்கள். சூரிய வழிபாடும் இருந்ததாக அறியமுடிகிறது. அவர்களது வாழ்வில் காளைகளும் பசுக்களும் முக்கிய இடம்பெற்றிருந்தன. அவர்களது இலச்சினை(seal)களில் பொறிக்கப்பட்டுள்ள காளை, பசு உருவங்கள் அவற்றிற்கு சான்றுகளாக உள்ளன. சிவ வழிபாடு கொண்டிருந்தார்கள் என்பதற்கு இலச்சினைகளில் உள்ள திரிசூலமே சான்று பகர்கின்றன. சமீபத்தில் ஆய்வில் அவர்கள் வழிபாடு கொண்ட கோவில் (Siva Temple) ஒன்றும் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டதானது மேலும் அதனை உறுதி செய்கிறது. அது தற்கால சிவன் கோவில்களின் கட்டுமான அமைப்பை கொண்டுள்ளது. இன்று நாம் வளர்க்கும் வீட்டு விலங்குகள் அனைத்தும் அன்றே அவர்களாலும் வளர்க்கப்பட்டு வந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. எந்த ஒரு கலைப் படைப்பும் கருப்பொருள் ஒன்று இல்லாமல் உருவாவது இல்லை. அந்த வகையில் சிந்து வெளி மக்களது முத்திரைகள் மிருகங்களின் உருவங்களும் வழிபாட்டுச் சின்னங்களும் அமைந்திருப்பது அவர்கள் மிருகங்கள் மீது கொண்டிருந்த நேயத்தையும் கட்வுள் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் குறிப்பதாக உள்ளது. உலகின் கலைகள் யாவும் மதங்களின் கட்டுமானங்களிலேயே வளர்ந்து வந்துள்ளன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.



காளை மனிதனைச் சித்தரிக்கும் சிந்து முத்திரை

புத்தமதக்கலையும், கிறிஸ்துவ மதக்கலையும், மொகலாயக் கலைகளும், ஜைனமதக்கலைகளும், இஸ்லாமியக் கலைகளும் கூட வளர்ந்துள்ள விதங்களானது அந்தந்த மதத்தின்பால் கொண்ட நம்பிக்கையைக் குறித்து விபரிக்க உருவாக்கப்பட்டதே ஆகும். இவைகளைச் சாராமல் இனம், வர்க்கம், மொழி என்ற அடிப்படையிலும் கலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. முற்போக்கு எண்ணங்கொண்ட கலைஞர்கள் உருவாக்கிய கலைகளும் ஏராளம். ஆனால் அவைகள் பிற்போக்கு அல்லது மிதவாத எண்ணங்கொண்ட அரசுகளால் அல்லது அதிகார வர்க்கத்தினரால் முடக்கப்பட்டு விடுகின்றன. அவ்வாறு முடக்கப்படுகின்ற வேலையானது நெருப்பைப் பொட்டலங்கட்டும் வேலைக்கு ஒப்பானது என்பதை அக்கலைகள் உணர்த்திக் கொண்டே உள்ளன. அக்கலைகள் தன்னை ஒடுக்கியவர்களையே அழித்தொழிக்கும் என்பது வரலாறு புரட்சிகர சிந்தனை கொண்ட கலைகள் எந்த உருகொண்டிருந்தாலும் அவை ஒரு நாள் பிரகாசித்தே தீரும் என்பது நிதர்சனம். திராவிட இனத்தால் 4000 ஆண்டுகளுக்கு முன் வணங்கப்பட்ட கடவுள்களானவை ஆரியர்களின் வருகைக்கு பின்னர் பல கிளைக் கடவுள்களாகவும், தெருக்கடவுள்களாகவும் உரு மாற்றம் கொண்டன. அதற்கு ஆரியர்களால் உருவாக்கப்பட்ட நால்வகை வேதங்களான ரிக், யஜீர், சாமம், அதர்வனம் ஆகியவைகளும் உபநிடதங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. அத்துடன் அவர்களே கடவுளின் நேரடி வாரிசாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மா (Birman) ஆக்கல் வேலைகளுக்கான கடவுள் என்று சித்தரிக்கப்பட்டார். அவரது நெற்றியில் இருந்து பிறந்தவர்கள் பிராமணர்களாகவும் தோள்களில் இருந்து பிறந்தவர்கள் அரசர்களாகவும் இடையில் இருந்து பிறந்தவர்கள் சூத்திரர்களாகவும் பாதத்தினின்று பிறந்தவர்கள் பஞ்சமர்கள் என்றும் வேதங்கள் சொல்கின்றன. திராவிடர்கள் வணங்கிய சிவன் அழித்தல் வேலைக்கு அமர்த்தப்பட்டார். இவ்வாறு கடவுளையும் கூறு போட்ட ஆரியர்கள் மனிதர்களை கூறு போட்டதில் வியப்பில்லை. இன்றைய திராவிட சமூகம் பல கூறுகளாக பிரிந்து கிடக்கும் இழி நிலைக்கு ஆரியர்களும் அவர்களால் உருவான வேதங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன என்றால் மிகையாகாது.

கடவுள் நம்பிக்கையும், இன ஒற்றுமையும், விலங்குகளின் மீது நேயமும் கொண்டு விவசாயத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளை நீண்ட காலமாக பல்வேறு வழிகளிலும், துறைகளிலும் மேற்கொண்டு வருகின்றது. இந்த ஒடுக்குமுறை வரலாற்றில் உச்சக்கட்டமே தமிழ் மக்களின் கல்வி வளத்தை அழித்துச் சிதைப்பதாகும். அண்மையில் உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட புதிய முறை, தமிழீழ மாணவர்களின் வெட்டுப் புள்ளிகளை எதிர்பார்க்க முடியாத அளவிற்கு உயர்த்தியது. போருக்குள் வாழ்ந்து கல்வியை முன்னெடுத்துவரும் எமது மாணவர்கள் இதை எதிர்த்து பேரணியாய்த் திரண்டார்கள். அடக்குமுறை அரசுக்கு எதிராக போர் முழக்கமிட்டார்கள்.

இது குறித்து, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் விடுத்த அறிக்கை, சிங்கள அரசின் இந்த ஒடுக்கு முறையை எதிர்க்கவும் அதற்காகப் போராடவும் தமிழீழத்தின் திசையெங்கும் எல்லாக் கூறுகளுமே அணிதிரள வேண்டும்என அறை கூவியது. சிங்கள அரசின் முகத்திரையைக் கிழித்தெறிய வேண்டும்; சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சிக்கு முன் சிங்கள அரசின் கல்வி ஒடுக்குமுறையை முன் வைக்கவேண்டும். தமிழினத்தின் கல்வி வளம் சிதைக்கப்படுவதற்கு எதிராக மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் அனைவருமே அணிதிரண்டு எதிர்க்க வேண்டும் என இவ்வறிக்கை மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இருக்கின்றன. ஆள் பாதி-ஆடை பாதி என்ற பழமொழிக்கேற்ப மனிதனின் வாழ்வியலில் பாதி பகுதியை ஆடைதான் நிறைவு செய்கின்றது. அடிப்படைத் தேவைகளான உணவு-உடை-இருப்பிடம் என்ற நிலையிலும் உணவுக்கு அடுத்தபடியாக உடைதான் பிரதானமாக உள்ளது. நவநாகரிக உலகில் உடைகள் தான் ஒவ்வொரு நாளும் வடிவமைப்பில் மாற்றம் அடைந்து கொண்டே உள்ளது. இது தற்செயல் நிகழ்வு அல்ல. காட்டு மிராண்டி கலைஞனின் சிந்தனை வீச்சு.

### ஒதுக்கப்பட வேண்டியவர்கள் யார்?

புதுமையான கருத்துக்களை, சிந்தனைகளை கலைவடிவில் படைக்கின்ற கலைஞர்களுக்கு விமர்சனங்கள்தான் அவர்களுக்கு மேலும் மேலும் உரமளிக்கும். விமர்சனங்களுக்கு ஈடு கொடுக்காது ஓடுகின்ற, ஒதுங்கி நிற்கின்ற அல்லது தன் திசையை மாற்றிக் கொள்கின்ற கலைஞர்கள் கால வெள்ளத்தால் மக்களோடு மக்களாக மறைந்தே போய்விடுகின்றார்கள். மக்களோடு வாழ்ந்தும் பிற்போக்குத்தனமான கலைகளை உருவாக்கிய கலைஞர்கள் மக்களோடு மாக்களாக வாழ்ந்து மடிகின்றார்கள். அவர்களது கலைப் படைப்புக்கள் மக்களை மீண்டும் பின்னோக்கி இழுத்துச் செல்ல படைக்கப்பட்டதால் அவர்கள் விலங்கினும் கீழானவர்களாக மதிக்கப்பட வேண்டிய கட்டாயத்திற்கு தங்களைத் தாங்களே தள்ளிக் கொள்கின்றனர். இவ்வகைக் கலைஞர்கள் தங்கள் படைப்புக்களை படைக்காமல் இருந்தாலே சமுதாயத்திற்கு நன்மை செய்தவர்களாக மதிக்கப்படுவர். இவ்வகைக் கலைஞர்களை ஒரு சமுதாயம் ஊக்குவிக்குமானால் அச்சமூகம் இழி நிலையின் எல்லைக்கே தன்னைத் தயார் படுத்திக் கொள்கின்றது என்பது தெளிவு. இவ்வாறான கலைகளை புறந்தள்ளுவது மட்டும் அந்த சமுதாயத்தின் கடமை அல்ல, அத்துடன் அந்தக் கலைகளின் பிறப்பிடமான கலைகளையும் ஒதுக்குவது தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் எந்த சூழலிலும் சமுதாயத்தை ஊடறுத்து செல்கின்ற மகோன்னத சக்தி கலைகளுக்கு மட்டுமே உண்டு. அந்தக் கலைகள் மக்கள் மத்தியில் மாற்றத்தை-தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. அவ்வாறு சக்தி கொண்ட கலைகளை படைக்கின்ற கலைஞனும் மக்கள் பால் பரிச்சயம் கொள்கின்றான். அவனால் சொல்லப்பட்ட கருத்துக்கள் மக்கள் பால் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கலைஞன் முற்போக்காளனாக இருந்தால் சமுதாயம் முன்னேறுகிறது. இல்லையெனில் யாவும் நடக்க இடமளிக்கிறது. எனவேதான் கலைஞர்கள் முற்போக்காளர்களாகவும், முற்போக்காளர்கள் கலைஞர்களாகவும் பரிணமிப்பதானது கப்பலின் மாலுமியைப் போல சமுதாயத்தின் முன்னணியும், வழிகாட்டியும் சரியாக அமையப் பெற்றதாகக் கொள்ளலாம்.

இயல்புக்கு மாறான-உடனடி நடைமுறைக்கு ஒவ்வாத ஆனால் எதிர்காலத்தை ஊடறுத்துப் பார்க்கின்ற சக்தியை, சுருங்கக் கூறவேண்டுமாயின் தெளிந்த கற்பனா சக்தியைக் கொண்டவர்கள் கலைஞர்களே! தங்கள் கற்பனைக்கு உருவடிவு கொடுப்பவர்களும் அவர்களே! தாங்கள் சொல்கின்ற கருத்துக்கள் இன்றைய உலகிற்கு ஒவ்வாதவை என்பதை நன்கு அறிந்திருந்தும் அதனால் தங்களுக்கு லாபமோ அல்லது பெருவாரியான மக்களிடத்தில் நற்பெயரோ ஏற்படப் போவதில்லை என்பது தெரிந்திருந்தும். சில சமயங்களில் தண்டனைகள்கூட தரவல்லவை என்பதை அறிந்தும் தங்கள் கருத்தைச் சொல்வதற்கு தயங்குவதில்லை. அந்த ஒரு காரணத்தாலேயே அவர்கள் சராசரி வாழ்வுக்குக்கூட தகுதியற்றவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்கள் மத்தியில் ஏற்படுத்தி விடுகிறார்களே, அந்த நிலை ஏன் அவர்களுக்கு மட்டும் உருவாகிறது. காரணம் தான் என்ன?

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்




# சோமாலியா கைவிடப்பட்ட நாடு

"நாநா, நாநா எழுந்திரு! சாப்பாடு வந்துட்டுது" இவ்வாறு மர நிழலில் குறங்கிப் படுத்திருந்த தனது மனைவியிடம் குனிந்து கூறியவாறே ஒரு இளங்கணவன், அவள் போர்த்திருந்த போர்வையை விலக்கினான். எலும்பும் தோலுமாய் கிடந்த அவனது அழகிய மனைவி இறந்து கிடந்தாள். பெருமூச்செறிந்தவாறு, தள்ளாடிக் கொண்டு, நிவாரணம் வழங்கும் இடத்தை நோக்கி அவன் நகர்ந்தான்.

இதுதான் சோமாலியாவின் நிலைமை. அங்கு 20 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கி உள்ளனர். 35 இலட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் 500க்கு மேற்பட்டோர் இறந்து போய்க் கொண்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. ஆனால் ஒரு வெளிநாட்டு நிவாரண அதிகாரி குறிப்பிடுவது போல், 1000க்கும் 2000க்கும் இடையிலான மக்கள் நாளும் செத்துக் கொண்டிருப்பதாக சொல்லுவதே உண்மையாக இருக்கலாம். சோமாலியாவே பிணக்காடாய் உள்ளது. 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 1/4 (கால்) பங்கினர் ஏற்கனவே இறந்து போய் விட்டனர். ஏனையோரும் இறந்து கொண்டிருக்கின்றனர். எலும்புக் கூடுகளாய் உணவுக்காய் அலைகின்ற ஆயிரக்கணக்கானோர் ஒருபுறம்; நடக்கவே முடியாமல், மர நிழலிலும், வெளிகளிலும் கிடந்து செத்துப் போவோர் ஆயிரக்கணக்கானோர். ஆபிரிக்க நாடுகளில் சாதாரணமாக ஏற்படுகின்ற உணவுப் பஞ்சம் என்று சிலர் சொல்ல முயல்கிறார்கள். ஆனால் அப்படியில்லை. இவ்வளவு கொடூரமான அழிவு முன்னெப்போதும் ஏற்படாதது. கிடங்கு வெட்டுவதற்குக் கூட அங்குள்ளவர்களுக்கு பலம் இல்லை. ஆழமற்ற கிடங்குகளுக்குள் இறந்தவர்களை இட்டுப் புதைக்கிறார்கள். "இன்று மட்டும் 40 குழந்தைகள் இங்கு புதைக்கப்பட்டதாக" ஒரு கிடங்கைச் சுட்டிக் காட்டி, நிவாரண தொண்டரொருவர் கூறினார்.




சோமாலியா: ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில், கொம்புப் பிரதேசம் (Horn of Africa) என்று வெளியே துருத்திக் கொண்டிருக்கும் நிலப்பரப்பில் இச்சிறிய நாடு அமைந்துள்ளது. இங்கு பெரும்பான்மையாக முஸ்லீம் மதத்தவர்களே உள்ளனர். இப்பெரும்பா




பசியால் அழும் சிறுவன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ன்மை முஸ்லீம் மக்கள் சிறுபான்மை கிறிஸ்தவ மக்களை அடக்கி ஒடுக்குகிறார்கள் என்ற அடிப்படையிலேயெ உள்நாட்டுப் போர் வெடித்தது. இதனை இனவழிக் குழுக்களிடையிலான போர் (Tribal War) என்றே குறிப்பிடலாம். பெரும்பான்மையின் ஒடுக்குமுறையே, ஆயுதப் போருக்கும் இவ்வழிவுக்கும் வழிவகுத்தது என்று கூறுதல் மிகையாகாது. சோமாலியாவில் சண்டையிடும் பிரிவுகளில் ஜெனரல் அய்டீட் என்பவரே பலம் பொருந்தியவராக காணப்படுகிறார். இப்பலம் பொருந்திய மனிதரோடு, கூட்டுச் சேர்ந்ததாகவே, சோமாலிய தேசிய இயக்கம் என்ற அமைப்பு காணப்படுகின்றது. பஞ்சம் தலைதூக்க -இவ்வமைப்புக்களால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பஞ்சத்தில் வாடும் மக்கள் இவர்களையோ, இவர்களது கட்டளைகளையோ கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை. இறுதியில் இக்குழுக்களும், அவற்றோடு இணைந்த வீரர்களும் கொள்ளையடிப்பவர்களாயும், தங்களுக்குள் சண்டையிடுபவர்களாயும், நிவாரண வேலைகளைத் தடுப்பவர்களாயுமே மாறியுள்ளனர். ஒழுங்கான கட்டமைவற்ற, கட்டுப்பாடற்ற பல்வேறு ஆயுதக் குழுக்களை வளரவிடுதல் பெரும் சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு லெபனானும், சோமாலியாவும் உதாரணங்களாக விளங்குகின்றன. இயற்கையான உணவுப் பஞ்சம் ஏற்படுவது ஒருபுறமிருக்க, பொருளாதாரத்தடையினை அமுல்படுத்தி, அரசாங்கம் போராடும் இனத்தை நிலைகுலையச் செய்து பணிய வைக்கும் முயற்சியில் ஈடுபடுவது எமது மண்ணிலும் அரங்கேற்றப்படுவதை இங்கு குறிப்பிடலாம். ஆனால் உண்மையான தலைமையின் கீழும், வழிகாட்டலின் கீழும் பொருளாதாரத் தடைக்கு எதிராக எமது மக்கள் எழுந்து நிற்பதையும், அதனை முறியடிக்க முயல்வதையும் நாம் வேறுபடுத்திப் பார்க்கலாம்.



உணவு நிவாரணத்துக்காக காத்திருக்கும் சோமாலிய மக்கள்

இத்தகைய பட்டினி நிலைமையை சர்வ தேச உலகம் புறக்கணித்தது என்பது மிகப் பெரும் உண்மையாகும். ஒன்றரை வருடங்களுக்குப் முன்னரே, இத்தகைய நாசகார அழிவு ஏற்படும் என்று சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் உணர்ந்திருந்தன. அவற்றிற்கு சரியான பரிகாரத்தை முன்கூட்டியே செய்யத் தவறி விட்டன. தற்போது, Save the Children Fund, Care International, MSF போன்ற அமைப்புக்கள் நிவாரணங்களை அனுப்பிய போதிலும் அவை போதியவையாக இல்லை. ஏற்கனவே தொடக்கி விடப்பட்ட பாரிய அழிவுப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மேற்குலகம் யூகோஸ்லாவியப் பிரச்சனையில் தனது கவனத்தை செலுத்தியிருந்தது. அமெரிக்கா தேர்தலில் திளைத்திருந்தது. சிறிய ஆபிரிக்க கறுப்பு நாடான சோமாலியாவைக் கவனிக்க ஒருவருமில்லை. ஐ.-நா. சபையின் உதவி நிறுவனங்கள் தற்போதுதான் நிவாரண உதவிகளை அனுப்பி வருகின்றன. நிவாரண உதவிகளை, அதன் விநியோகத்தைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. சபையின் படையும் சிறிய அளவில் அனுப்பப்பட்டுள்ளது. அப்படையும் சோமாலிய துறைமுகத்தையும், தலைநகர் மொகடிஷ்யுவையும் சுற்றியே நிறுத்தப்பட்டுள்ளன. பல்வேறு நாடுகளில் ஏற்படுகின்ற நெருக்கடிகளுக்கு தேவைப்படும் நிதி, வளம் மிக்க நாடுகளால் வழங்கப்படாமையினால் ஐ. நா. சபை திணறிக் கொண்டிருக்கிறது. நிவாரணத் தொண்டர்கள் மத்தியிலேயே இயலாமை காணப்படுகின்றது. பிரெஞ்சு வைத்திய நிறுவனமான MSF அதிகாரி கூறுவது போல் "நிலைமை மிகவும் மோசமானது. ஒரு சில குழந்தைகள், முதியவர்க்ளையாவது எம்மால் காப்பாற்ற முடிந்தாலே பெரிய காரியம்" வளங்குறைந்த மூன்றாம் உலக ஏழைநாடுகள் -போரினால் பாதிக்கப்படும்போது -அங்கு நியாயமான தீர்வு ஏற்படுத்தப்படாமல் சீரழிக்கப்படுகின்றன என்பதற்கு சோமாலியா ஒரு நல்ல உதாரணம்.

— வள்ளவன் —

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

5-10-92





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "அழுகின்ற பெண்"

ஓவியம்: பிக்காசோ



**ஆழ்ந்த சோகத்தின் குறியீடாக கைக்குட்டையை இறுகக் கடிக்கும் நிலையில்,
அழிவு, உடைவு, குழப்பம் என்பவற்றை வெளிப்படுத்தி நிற்கும் அழுகின்ற பெண்ணின் ஓவியம்.**

ஸ்பெயின் நாட்டில் குடியரசு வாதிகளுக்கும், பாசிச வாதிகளுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப்போர்;
அதிலும் விஷேடமாக பாசிச வாதிகளினால் குண்டுவீசி அழிக்கப்பட்ட
பாஸ்க் மாகாணத்தில் உள்ள குவேர்னிக்கா என்னும் நகரச் சம்பவங்களில் ஒரு சித்தரிப்பு.

நவீன ஓவியத்தின் தந்தையான பிக்காசோவினால் வரையப்பட்ட 'குவேர்னிக்கா' என்ற
பிரசித்திவாய்ந்த சித்திரத்தில் உள்ள இறந்த குழந்தையை தாங்கி நிற்கும்
அன்னையை அடியொற்றி இச்சித்திரம் வரையப்பட்டது.

www.tamileelamarchive.com